www.tamilarangam.net

Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

කණ්ණෝට්ටම් KANNOTTAM

வெளியீடு-42 | 05 நவம்பர் November 2007 | விலை: 10.00

அதிகாரத்தை மையப்படுத்தும் அமைப்புமுறை அகிம்சையின் அடிப்படையில் அமையப்பெறும் சமூகத்துக்கு முரண்பாடானது.

காந்தியடிகள் -அரிஜன 18-01-1942 பக்-5

# அரசியல் தீர்வு காலந்தாழ்த்த முடியாதது



**இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு இவ்வருட இறுதியில் அல்லது அடுத்த வருட முற்பகுதியில் முன்வைக்கப்படும் என எதிர்வு கூறப்படுகிறது. பேராசிரியர் திஸ்ஸ விதாரண இது விடயத்தில் எடுத்துக் கொண்டுள்ள கரிசனையை நாம பாராட்டாமல் இருக்க முடியாது.**

ஒரு மேம்பட்ட தீர்வை முன்வைப்பதற்காக அவர் சகல வழிகளிலும் முயற்சி எடுத்து வருகிறார். அனைத்துக்கட்சி குழுவின் செயற்பாடுகளில் அவரது அயரா முயற்சியை பிரத்தியேகமாக குறிப்பிட்டாக வேண்டும்.

இனப்பிரச்சனைக்கான தீர்வு கடந்த 60 ஆண்டுகளாக ஒத்திபோடப்பட்டு இழுத்தடிக்கப்பட்டு வந்ததன் காரணமாக இன்று நாடு மிகப்பெரும் அராஜகத்தில் சிக்கித் திணறுகிறது. மக்கள் அகதிகளாதல், காணாமல் போதல், சித்திரவதைகள், கொலைகள், மனித உரிமை மீறல்கள் யாவும் இந்த இனப்பிரச்சனையுடன் தொடர்புபட்டு நிகழ்ந்துள்ளன. இனப்பிரச்சனைக்கான கோரிக்கை தொடர்பில் சிங்கள மேலாதிக்கவாத வன்முறைகளும் புலிகளின் பாசிச வன்முறைகளும் பல்லாயிரக் கணக்கான மனித உயிர்களை துவம்சம் செய்துள்ளன.

இந்தப் பிரச்சனைகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளியிட வேண்டுமானால் இனப பிரச்சனைக்கு ஐக்கிய இலங்கைக்குள நியாயமான தீர்வு காண்பதற்கு முன்னுரிமை கொடுத்தலே முதலும் முக்கியமுமான நடவடிககையாகும் இலங்கை சுதந்திரம் பெற்று 59 வருட காலத்தில அரைவாசிக்கு மேற்பட்ட காலம் இன முரண்பாட்டு மோதல் யுத்தமாகவும், வன்முறைகளாகவும் கழிந்து கொண்டிருக்கிறது.

உண்மையில் இந்த நாட்டு மக்கள் மகிழ்ச்சியாகவும், சுயமரியாதை கௌரவத்துடனும், ஐக்கியமாகவும் முன்னேற்றகரமாகவும் வாழ்வதற்கு உரித்துடையவர்கள். சமகால உலகுடன் ஒத்தோடுவதற்கான வளங்களும், ஆற்றல்களும் எம்மிடம் இருக்கின்றன.

ஆனால் நாம் அவற்றை விரயமாக்கிக் கொண்டிருக்கிறோம். எமது விரயங்கள் அடுத்தடுத்த சந்ததிகளுக்கும் சுமையாக ஏற்றப்படக் கூடாது.

எமது நாட்டு மக்கள் பல்லினங்களின் தேசமாக இணைந்து வாழ்வதற்கான ஏற்பாடுகளே இங்கு முதலும் முக்கியமுமானது. ஜனநாயகம், மனித உரிமை, சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றின் அடித்தளத்தில் ஐக்கியம் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

இனப்பிரச்சனையின் தாக்கம் பொருளாதார அரங்கிலும் பாரிய சேதாரங்களை ஏற்படுத்தியிருக்கிறது. நாளும் பொழுதும் விலைவாசி என்பதும் கட்டுப்படுத்த முடியாததாக அதிகரித்து வருகிறது.

*(தொடர்ச்சி 03ம் பக்கம்...)*

# கொலைகளை நிறுத்தி பேச்சுவார்த்தைக்கு செல்லவும்

**அன்புள்ள பிரபாகரன்,**



கடந்த திங்கட்கிழமை அனுராதபுரத்தில் உம்மால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை நான் மிக வன்மையாக கண்டிக்கின்றேன். இந்த சம்பவம் யாரும் மகிழ்ச்சியடையக்கூடிய ஒரு நிகழ்ச்சியல்ல. நியாயமாக சிந்திக்கும் ஒவ்வொருவரும் உமது கொடூரமான இச் செயலுக்கு உம்மை திட்டத்தான் செய்வார்கள். இருப்பினும் மனைவி மக்களுடன் பாதுகாப்பாக வாழ்கின்ற ஒரு சிலர் உமது செயலை மிகைப் படுத்தி பாராட்டும் தெரிவிப்பர். உமக்கு பாராட்டு தெரிவிக்குமளவுக்கு உமது செயல் தகுதியானதல்ல.

இந்த நடவடிக்கையில் 35 உயிர்கள் பலிகொள்ளப்படுவதற்கு காரணமாய் இருந்திருக்கிறீர். அவற்றில் 14 பேர் ஏழை சிங்கள குடும்பங்களில் இருந்து பிழைப்புக்காக விமானப்படையில் சேர்ந்துள்ளனர். மிகுதி 21 பேரும் உம்மால் கரும்புலிகளின் தற்கொலை படைக்கு பலாத்காரமாக இணைக்கப்பட்டு மூளைச்சலவை செய்யப்பட்டவர்களாவர். அவர்கள் கூட தத்தம் குடும்பங்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்புள்ள ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்தவர்களாவர். பத்திரிகைகளில் உம்மை நடுவில் வைத்து எடுக்கப்பட்ட 22 பேரடங்கிய போட்டோவில் உள்ள 22 பேரும் இறந்திருந்தால் உம்மை உண்மையான வீரனென பாராட்டியிருப்பேன். ஆனால் உம்முடன் படத்தில் தோன்றும் 21 ஏழைப்பெற்றோரின் பிள்ளைகளை பலியெடுத்தது வருத்தத்திற்குரியதாகும்.

*(தொடர்ச்சி 03ம் பக்கம்...)*

# மட்டக்களப்பு மக்களின் உடனடி ஜீவாதார தேவைகள்

கடந்த 14-10-2007 அன்று அரசியலயாப்பு விவகார அமைச்சர் டியூ குணசேகர, பொதுநிர்வாக உள்நாட்டமைச்சர் கரு ஜெயசூரிய ஆகியோர் உள்ளிட்ட அமைச்சர்கள் மட்டக்களப்பு மாவட்ட நிலைமைகளை அவதானிப்பதற்காக மாவட்டச் செயலாளர் அலுவலகத்துக்கு வருகை தந்திருந்தபோது அவர்களிடம் ஈ.பி.ஆர்.எல்.எப் - பத்மநாபா அமைப்பின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான இரா. துரைரட்ணம் அவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் குறைபாடுகள், தேவைகளை குறிப்பிட்டு பின்வரும் தலைப்புக்களில் விரிவான மகஜரை சமர்ப்பித்திருந்தார்.





- அரச பிரதேச செயலகம், பிரதேச சபை ஏனைய திணைக்களங்களிலுள்ள தேவைகளை நிறைவேற்றுதல்.
- அரச திணைக்களங்களில் நிலவும் ஆளணி பற்றாக்குறையை நீக்குதலும், வெற்றிடங்களை நிரப்புதலும்.
- கஷ்டப் பிரதேசங்களில் நீண்டகாலம கடமையாற்றும் ஊழியர்களை இடம் மாற்றம் செய்யும் கோரிக்கை.
- அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீட்டில் தமிழ் பிரதேசங்கள் புறக்கணிப்பு.
- இடம்பெயர்ந்தவர்களை குடியமர்த்தலும், மீளக்குடியமர்ந்தவர்களின் தேவைகளை நிறைவேற்றுதலும்.
- போக்குவரத்து வசதிகளை மறுசீரமைத்தல்.

# மியன்மாரில் ஜனநாயகத்துக்கான போராட்டம்



அண்மையில் மியன்மாரில் ஜனநாயகத்துக்கான இயக்கம் மீண்டும் பேரெழுச்சிப் பெற்றுள்ளது. கடந்த வருடம் நேபாளத்தில் ஜனநாயகத்திற்கான இயக்கம் தீவிரமடைந்திருந்தது. குறிப்பிடத்தகுந்தளவு மாற்றங்கள் நேபாளத்தில் நிகழ்ந்தன. முடியாட்சியின் வரம்பற்ற அதிகாரத்திற்கு கடிவாளம் இடப்பட்டது. பாராளுமன்றத்தின் அதிகாரம் ஸ்திரப்படுத்தப்பட்டது. சமூக சீர்திருத்தங்களுக்கு இசைவான நிலைமை உருவாகியது.

தற்போது மியன்மாரில் இராணுவ சர்வாதிகார ஆட்சிக்கு எதிரான மக்களின் வீதிப் போராட்டங்கள் அதிகரித்துள்ளன. மியன்மாரின் மனச்சாட்சியின் குரலான அங்-சாங்-சுகி அம்மையார் இன்னும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். அவர் பல வருடங்களாக இவ்வாறு வாழ்கின்றார். அவ்வப்போது ஜனநாயகத்துக்கான எழுச்சிகள் மியன்மாரில் இடம்பெறத் தவறவில்லை. சர்வதேச சமூகம் பாரியளவிலான அழுத்தத்தை மியன்மாரின் இராணுவ ஆட்சியாளர்களுக்கு எதிராக கொடுத்து வந்தபோதும் அதனை அவர்கள் செவிமடுக்கவில்லை. மீண்டும் மக்கள் வீதியில் இறங்கியிருக்கிறார்கள். மியன்மாரின் நிலை இவ்வாறு நீடித்துச் செல்ல முடியாது என்ற அபிப்பிராயம் உள்ளூரிலும், ளது. அண்மையில் ஊர்வலமொன்றில ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட பௌத்த மத குருக்களும் சுடப்பட்டிருக்கிறார்கள்.

எனவே ஜனநாயக மாற்றம் மியன்மாரில் விரைந்து ஏற்பட வேண்டும். மியன்மார் மக்கள் சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் நாள் அண்மிக்க வேண்டும்.

சுதநந்திரமான வாழ்விற்கு இடமில்லாத மியன்மார் சமகால உலகில் மிக மோசமாக பின்தங்கிய நாடாகவும் காணப்படுகிறது. சமூக பொருளாதார மறுமலர்ச்சி மியன்மாரில் ஏற்படுவதாக இருந்தாலும் அங்கு ஜனநாயக கட்டுமானங்கள் மீள நிறுவப்படுவது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கண்ணோட்டம்
Kannottam

# அன்றாட மனித அவலங்களும் இனப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வும்

இலங்கையில் தற்போது நிலவும் சிக்கலான சூழ்நிலையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை துரிதப் படுத்துவதே முன்னுரிமை பெறுகிறது. யுத்தம், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பல்வேறு விதமான சர்ச்சைகள் தொடரும் இக்கட்டான நிலையில் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கான திசையில் சகல பொறுப்பு வாய்ந்த அரசியல் சக்திகளும் ஒருமித்து செயற்படுவதே பிரதானமாக அமைய வேண்டிய விடயமாகும்.

கடந்த கால் நூற்றாண்டுகளில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இத்தகைய சூழ்நிலை அவ்வப்போது தோன்றியிருக்கின்றன. ஆனால் அதனை நாம் தொடர்ச்சியாக அவ்வாறே விட்டு வைத்திருக்க முடியாது. இந்த சூழ்நிலை நீடித்துச் செல்வது மனித அழிவுகள் தொடர்வதற்கும் இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தி மேலும் மேலும் பின் தள்ளப்படுவதற்கும் வழிவகுக்குமே அல்லாமல் நாட்டை இந்த முரண்பாட்டுச் சிக்கலில் இருந்து விடுவிக்க உதவப் போவதில்லை.

சமூகப் பேரழிவை யாரும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. குறிப்பாக இந்த நாட்டின் பெருவாரியான மக்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. சட்டவாக்கமன்றங்களும், நீதிமன்றங்களும நிர்வாக சேவை அமைப்புக்களும் காவல்துறையும் மக்களுக்கு பிரதானமாக மக்களுக்கு உதவிகரமானதாக இருக்க வேண்டும். ஊடகங்களும் அவ்வாறே. இவற்றுக்கு மக்களின் நல்வாழ என்பதை விஞ்சிய வேறு காரியம் இருக்க முடியாது. இதுவே மக்களின் நியாயமான எதிர்பார்ப்பும் கூட.

துரதிஷ்டவசமாக மக்களின் வாழ்வில் இந்த நிறுவனங்கள் பல சந்தர்பங்களில் துன்ப சுமைகளை இறக்குவனவாக காணப்பட்டு இருக்கின்றன. இந்த நிறுவனங்கள் மக்களின் அன்றாட வாழ்வுடன் எதிர்கால கனவுகளுடன் இசைவுபட்டனவாகவே இருக்க வேண்டும்.

ஆனால் மக்கள் மிக மோசமாக விரக்திகொள்ளுமளவுக்கு நிலைமைகள் காணப்படுகின்றன. இந்நிலைமை சீர் செய்யப்பட வேண்டியது மற்ற எல்லாவற்றையும்விட முக்கியமானதாகும்.

வடக்கு கிழக்கில் ஒரு கணிசமான பகுதியினர் சொந்த வீடுவாசல்களை விட்டு அகதி முகாம்களிலும் உறவினர்கள், நண்பர்களின் வீடுகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பலர் பல வருடங்களாக அலைந்து கொண்டிருக்கிறார்கள். உயிரிழப்புக்களும் அனறாடம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. உயிரழிப்பும், சொத்தழிவும் எமது நாட்டில் இரண்டரை தசாப்தகால நிகழ்ச்சிகள். இவற்றை தடுத்து நிறுத்த மக்கள் சமூகங்களிடையே பாரபட்சங்கள் நிலவாதிருக்க குறிப்பிட்ட ஒரு பகுதியினருக்கு மாத்திரம் அநீதி இழைக்கப்படுவதை தடுக்க எமது சட்டவாக்க நீதி, சிவில் நிர்வாக பொறிமுறைகள் எவையும் பாரியளவு இடைவெளியை போதாமையை கொண்டுள்ளன. பாரபட்சங்களையும், சமூக அநீதிகளையும் உள்ளடக்கியதாகவே இந்த நாட்டின் இந்த கட்டுமானங்கள் காணப்படுவதாலேயே இனமுரண்பாட்டிலும், யுத்தத்திலும் இந்த நாடு சிக்கித் திணறுகிறது.

இந்த பாரபட்சம் அநீதி களையப்பட வேண்டும். அதற்கேற்றவாறு அரசியல் யாப்பு மற்றும் அரசியல் நிர்வாக கட்டமைப்புக்களில் பாரிய மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும். அதனூடாக இலங்கையின் சகல சமூகங்களும் உள் வாங்கப்பட வேண்டும். அவ்வாறு நிகழ்ந்தால்தான் இந் நாடு ஒரு தேசமாக மலர முடியும். இல்லாமல் இந் நாட்டில் பேரினவாதத்துடனும், பிரிவினைவாதத்துடனும் சகவாழ்வு வாழ்ந்து காலத்தை போக்கிடலாம் என்று யாரும் கருதிவிடக் கூடாது.

இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கான அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவின் முயற்சிகள் பலவீனமடைய அனுமதிக்க முடியாது. அதனது ஒட்டுமொத்த ஆலோசனைகள், அல்லது பெரும்பான்மையினரின் ஆலோசனைகள் பகிரங்கமாக வெளிவர வேண்டும். ஏனெனில் அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவில் இலங்கையின் வெவ்வேறு சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் தமது ஆலோசனைகளை முன்வைத்திருக்கிறார்கள். இனங்களின் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு இப்போதுள்ளதில் இதுவே மிகச் சிறந்ததெனவும் நாம் கருத முடியும்.

இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணாதவரை நாம் இன்னும் பல வருடங்களுக்கு அகதி வாழ்வையும், மனிதர்கள் காணாமல் போவதையும், ஆட்கடத்தல்களையும்,கப்ப அறவீடுகளையும், சிறுவர்களை யுத்தத்திற்கு அணிதிரட்டுவதையும், அடிக்கடி சண்டைகளிடையே மக்கள் அகப்பட்டு இறந்து போவதையும் பற்றியே பேசிக்கொண்டிருப்போம். எமது கையறு நிலை பற்றி அங்கலாய்த்து கொண்டிருப்போம்.

இனப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு என்பது இத்தகைய அவலங்களுக்கு பாரியளவில் முற்றுப்புள்ளி வைக்க முடியும். இலங்கையில் சமூக பொருளாதார அபிவிருத்தி பற்றியும் நாட்டின் எதிர்கால சுபீட்சம் பற்றியும் முழு வீச்சுடன் செயற்படுவதற்கு அதிகூடியபட்ச ஜனநாயக உணர்வுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது முன்நிபந்தனையாகும்.

# மத அடிப்படைவாத – பாசிச பயங்கரவாதங்கள் மனித வாழ்விற்கு எதிரானவை.



பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ பாகிஸ்தானில் வந்திறங்கியபோது பெருந்தொகையான மக்கள் அவரை வரவேற்க ஒன்று கூடினர். பாகிஸ்தானில் மக்களிடம் ஜனநாயகம் தொடர்பான நியாயமான எதிர்பார்ப்பு அதற்கு காரணமாக இருக்கலாம். பொனாசீர் பூட்டோ ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். இது பயங்கரவாத சகதிகளுக்கு வெறுப்பேற்றியது. எப்போதும் மனதை அழுக்காகவும், குரோதமாகவும், வைத்திருக்கும் பயங்கரவாதிகள் லட்சக்கணக்கான மக்கள் கூடியிருந்த இடத்தில் தமது தற்கொலை தாக்குதலை பெனாசீர் மீது நடத்த முற்பட்டார்கள். அதில் உடனடியாகவே இந்த பயங்கர சம்பவத்தில் சுமார் 150 பேர்வரை உடல் சிதறி மரணமானார்கள். 500 பேர்வரை படுகாயமடைந்தார்கள்.

மத அடிப்படைவாத பாசிசவாத சக்திகள் பெருவாரியான மக்களுக்கு எப்போதும் விரோதமானவை என்பதை கராச்சி பயங்கரங்கள் உணர்த்தி நிற்கின்றன. மக்களின் எதிர்பார்ப்புக்கள் நல் இயல்புகளை அவர்களின் உயிர் வாழ்க்கையை இத்தகைய பயங்கரவாதம் அடியோடு வெறுக்கிறது. பொதுவாக மனிதர்கள் மீது அது குரூரங்களை விதைக்கிறது.

ஆப்கானிஸ்தானில், ஈராக்கில் யுத்தம் ஒருபுறமிருக்க இத்தகைய அடிப்படைவாத சக்திகள் வெளிநாட்டு பிரஜைகளை கடத்துவது, தலை துண்டிப்பது போன்ற காரியங்களில் ஈடுபட்டு வருகின்றனர். மதத்தின் பேரில் காட்டுமிராண்டித்தனங்கள் அரங்கேற்றப்படுகின்றன.

நாகரீகமான வாழ்வை நோக்கி, முன்னேற்றத்தை நோக்கி மக்கள் செயற்படுவதை இச் சக்திகள் தடுத்து நிறுத்த முற்படுகின்றன. இந்த பயங்கரவாதம் சமூக பொருளாதார அபிவிருத்தியின் நேரடி எதிரியாகவே வளர்ச்சியடைந்துள்ளன.

மக்கள் கூடும் இடங்களில் குண்டு வைப்பது, ரயில்களில், பேருந்துகளில், விமான நிலையங்களில், விமானங்களில் என பயங்கரவாதிகளின் செயல்கள் உலகளாவிய அளவில் பாரிய அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது.

பயங்கரவாதிகள் ஒரு தரப்பினிடமிருந்து மறுதரப்பினர் கற்றுக் கொள்கின்றனர். உயிர்கொல்லி ஆயுதங்களை பரிமாறிக்கொள்வது, போஸ்வஸ்து வியாபாரம் ஆகியவற்றில் பரஸ்பரம் இணைந்து செயற்படுகிறார்கள்.

உதாரணமாக பாகிஸ்தான் கராச்சி நகரில் நடந்த குண்டு வெடிப்பை அவதானிப்போமானால் அதேபோன்றதொரு அனுபவம் ஆறு ஏழு வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் ஜனாதிபதி தேர்தலுக்கான பிரச்சாரத்தில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அவர்கள ஈடுபட்டிருந்தபோது பெருவாரியான மக்கள் கூடியிருந்த இடத்தில் சந்திரிகாவை இலக்கு வைத்து புலிகள் தற்கொலை குண்டை வெடிக்க வைத்தார்கள். அதில் அப்பாவிகளான பலரும் பலியானார்கள். பேருந்துகளுக்கு குண்டு வைப்பது, சந்தை பகுதிகளில் குண்டு வைப்பது என்பவையெல்லாம புலிகளுக்கு கைவந்த கலைகள். தமது இராணுவ இலக்குகளை எய்துவதற்காக பல ஆயிரக்கணக்கான மக்களை ஏன் பல லட்சக்கணக்கான மக்களை அபாயகரமான நிலைமைக்குள் தள்ளுவது என்பது புலிகளுக்கு மிகவும் பரிச்சயமான பயங்கரவாதமே.

தென்னாசிய நாடுகள் பாரிய பயங்கரவாத சவால்களை எதிர்நோக்குகின்றன. இந்த நாடுகளில் வறுமை ஒழித்தல், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல், இயற்கையின் சீற்றங்களுக்கு முகம் கொடுத்தல் சமூகங்களிடையே நல்லுறவை பேணுதல் என பல பிரச்சினைகள் நிலவுகின்றன.

ஆனால் இததகைய மக்கள் சார்ந்த சவால்களை எதிர்கொள்ள இந்தியாவில் சிறந்த ஜனநாயக கட்டமைப்பு நிலவுகிறது.

துரதிஸ்டவசமாக மற்றைய நாடுகளில் அத்தகைய நிலையில்லை. மக்களின் பிரச்சினைகளையும் அடிப்படைவாத பாசிச பயங்கரவாத சக்திகளையும் வேறு வேறாக அணுக வேண்டும்.

பாசிச பயங்கரவாத சக்திகளுக்கு தயவுதாட்சணியம் இருக்கக் கூடாது. ஏனெனில் அவர்கள் பெருவாரியான மக்களின் உயிர் வாழ்க்கைக்கு அச்சுறுத்தலா இருக்கிறார்கள்.

அதேவேளை ஜனநாயக வழியில் செயற்படுகிறவர்கள் என சொல்லப்படுகின்ற அரசியல்வாதிகளும் பயங்கரவாதிகளை தமது சகாக்களாக சகவாசம் வைத்துக்கொண்டு அரசியல் செய்யலாம் என்ற போக்கும் அதிகரித்து வருகிறது. இது மிகவும் ஆபத்தான போக்காகும்.

இதேவேளை மக்கள் சமூகங்களின கோரிக்கைகளை நிறுவப்பட்ட அரசுகள வன்முறை, குரூரங்கள் மூலம் அணுகும் போக்கும் பயங்கரவாதிகளின் பிரச்சினைகளுடன் பெருவாரியான மக்களின் பிரச்சினைகளை ஒன்றாக போட்டு குழப்புவதும் முழு நாடுமே பின்தங்கலுக்கும், நிரந்தர வறுமைக்கும் உள்ளாகவே வழிவகுக்கும்.

இந்தப் பிராந்தியத்தில் அகிம்சை வழியிலான போராட்டத்தை நடாத்தி வெற்றிகண்ட காந்தி மகான் மறைந்து 60 ஆண்டுகள் ஆகவில்லை. இன்று காந்திய வழிமுறை பற்றிய சிந்தனை உலகளாவிய அளவில் கருத்திற்கெடுக்கப்பட்டிருக்கிறது. மார்ட்டின் லூதர், நெல்சன் மண்டேலா போன்ற தலைவர்கள் காந்திய வழியில் வெவ்வேறு காலகட்டங்களில் போராடி வெற்றி பெற்றவர்கள். இவர்களிடமெல்லாம் இருந்தது எளிமை, மாபெரும் மக்கள் நேசமும்தான். காழ்ப்புணர்வையும், குரோதத்தையும் அவர்கள் அறவே வெறுத்தார்கள். மக்களின் உரிமைகள், சமூகங்களிடையே நல்லுறவு, சகிப்புதன்மை, மத நல்லிணக்கம் என்பனவே சமூக நீதிக்கான பிடிவாதமான, அகிம்சை வழியிலான போராட்டம் பெருவாரியான மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் என்பனவே காந்தியடிகளின் ஆற்றலாக இருந்தது. நற்செயல்கள், நற் சிந்தனைகளை நோக்கி மக்களின் கவனத்தை திசை திருப்ப முடிந்தது.

எனினும் வன்முறை மனநோயாளர்கள் இதனை சகித்துக் கொள்வதில்லை. இந்து, முஸ்லீம் ஒற்றுமையை வலியுறுத்தி செயற்பட்டதற்காக காந்தியடிகள் ஒரு வெறிபிடித்த துப்பாக்கிதாரியால் படுகொலை செய்யப்பட்டார்.

இந்த மணநிலையே தற்போது உலகளாவியளவில் செயற்படும் பயங்கரவாதிகள் மத்தியில் காணப்படுகிறது. இவர்கள் மனித குலத்திற்கு விரோதமாக செயறபடுகிறார்கள். சமகாலத்தில் இயற்கையின் பேரழிவுகளும் இத்தகைய பயங்கரவாத சக்திகளும், மனித குல எதிர்கால இருப்பிற்கு பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளனர்.

அதேவேளையில் மக்களின் உரிமைகளை நெகிழ்வுத்தன்மையுடன் அணுகாத வன்முறை வகைப்பட்ட அரசுகளும் உலகில் பரவலாக காணப்படுகின்றன. இந்த அரசுகளின் பயங்கரவாதமும் அரசுகள் அல்லாத பயங்கரவாதத்திற்கு வழிவகுக்கின்றன. அல்லது அவற்றை ஊக்குவிக்கின்றன.

நவீன உலகில் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பெருவாரியான மக்களின் பங்குபற்றலுடன் அகிம்சை வழியிலான இயக்கம் நிதானமான பேச்சுவார்த்தைகள் கலந்துரையாடல்கள், விழிப்புணர்வு கருத்தாடல்கள் என்பனவே பெருமளவு உதவக் கூடியன.

வன்முறை ஆயுதம் என்பது மக்களை உயிர்பலி கொள்வதோடு பூமியை மக்கள் வாழ முடியாத இடமாகவும் மாற்றுகிறது. மிதி வெடிகள், கண்ணி வெடிகள், தற்கொலை குண்டுகள், இரசாயன ஆயுதங்கள், மனதையும் உடலையும், வாழ்விடங்களையும் மிக மோசமாக பாதிக்கும் பேரொலி எழுப்பும் வெடிகுண்டுகள் என்பன சுதந்திரம் பெற்றுத்தரும் என்ற கருத்துக்கள் மிக ஆபததானவை என்பதை சமகால உலக நடப்புக்கள் உணர்த்தி நிற்கின்றன. இந்த ஆயுதங்கள் சமூகங்களை நாகரீகங்களை அழித:துவிடும் என்பதற்கு எஞ்சி நிற்கும் சாட்சியமாக தமிழர்கள் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

அந்த வகையில் கராச்சியில் நடந்த குண்டுவெடிப்பு தாக்குதல் மனித நாகரீகத்துக்கு பதிலாக காட்டுமிராண்டித்தனத்தை பிரதியீடு செய்ய எத்தனிப்பவர்களின் தாக்குதலாகும். இத்தகைய தாக்குதல்கள் உலகின் எப்பகுதியில் நடந்தாலும் தயவு தாட்சணியமின்றி கண்டிக்கப்பட வேண்டும். ●

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.
அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:–

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

310, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 2222022

29 ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 2225179

No: 159, கடல்முக வீதி
திருகோணமலை.
☎ 026 2227118

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*பா. அச்சுதன். யாழ்ப்பாணம்*

**அனுராதபுர விமானத்தளத்தின் மீதான புலிகளின் தாக்குதல் பற்றி?**

இதில் மகிழ்ச்சி (தற்காலிகமான) அடையக்கூடியவர்கள்:-

புலிகளையும் தமிழ்த் தேசியத்தையும் வைத்து வரட்டுக் கௌர வம் பேசிப் பிழைப்பு நடத்தி, வசதியாக, ஆனால் விஷத்தைக் கக்கி வாழும்- ஈழத்தமிழ்ச் சமுதாயத்தை மேலும் அதலபாதாளத திற்கு தள்ளும் கைங்கரியத்தை செய்து கொண்டிருக்கும்- உள்நாட்டு வெளிநாட்டு தமிழ்ப் பிரமுகர்கள் சிலர்.

-புலிகளின் வன்முறைகளைச் சாக்காக வைத்துக் கொண்டே ஈழத்தமிழரின் நியாயமான அபிலாஷைகளுக்கு ஒரு நீதியானதும், நிரந்தரமானதுமான அரசியல் தீர்வை அளிக்காது காலத்தைத் தாழ்த்திக் கொண்டே போகலாம் என்ற எண்ணத்துடன் செயல் படும் சிங்களப் பேரினவாதிகள் சிலர்.

-இலங்கை மக்களுக்கு பாரிய பயன்தரக்கூடிய, மேன்மை வா ழ்வு வாழக்கூடிய, வாழவேண்டிய, மிகச் சிறந்த இளைஞர்களை பலிக்கடாக்களாக அனுப்பி அவர்களின் அநியாய மரணத்தில் தங்களின் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கும் விவஸ்தை கெட்ட பிணந் தின்னித் தலைவர்கள்.

*என். கந்தசாமி. மட்டக்களப்பு*

**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரின் இலங்கை இனப் பிரசனையை "மூன்று கட்டங்கள்" ஊடாக தீர்வு காண பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று லண்டனில் நடைபெற்றதாமே. அது பற்றி?**

அக் கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்த "தமிழ் சமாதான ஒன்றியம்" என்ற அமைப்பினர் அது பற்றிப் பின்னர் வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பொன்று எனக்கும் கிடைத்தது. அதிலிருந்து சில பகுதிகளைத் தருகிறேன்-

இந்த "மூன்று கட்ட தீர்வுத் திட்டம்" முன்கொண்டு வரப்படுமானால், இது சர்வகட்சி பாராளுமன்ற தெரிவுக் குழு முன்மொழிய முனைந்து வரும் இனப் பிரச்சனைக்கான தீர்வுப் பொதியை நிரந்தரமாகவே பின் தள்ளி விடும் அபாயம் இருப்பதாக அறிவுறுத தப்பட்டது. குறிப்பாக, இலங்கை இனப் பிரச்சனைக்கு சர்வகட்சி பாராளுமன்ற தெரிவுக்குழு பரிந்துரை செய்யும் ஏற்பாடுகள் அதிகளவு அதிகார பரவலாக்கத்திற்கு ஆதரவுள்ள காரணத்தால், சர்வதேச அரசுகளின் ஆதரவுடன் இலங்கை அரசுக்கு மேலும் அழுத்தத்தை அளித்து சர்வகட்சி பாராளுமன்ற தெரிவுக் குழுவின் பரிந்துரைகளை பகிரங்கமாக்கி, அவை பாராளுமன்ற வாக்கெடுப்பில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் இலங்கை இனப் பிரச்னைக்கு ஒரு நிரந்தர தீர்வை எட்டும் முயற்சிகள் அனைத்தையும் இத் தீர்வுத் திட்டம் முடக்கும் என கருதப்பட்டது.

மேலும், இந்த மூன்று கட்டம் மூலமான தீர்வு முயற்சியானது அதனது மூன்றாவது கட்டத்தில், இலங்கை அரசியல் அமைப்பின் 13வது திருத்தச் சட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட மாகாண சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்க ளை மட்டுமே எமது மக்களுக்குப் பெற்றுத் தரும் என்பதால், இந்த ஏற்பாடு இனப்பிரச்னைக்கான இறுதித் தீர்வுக்கு இட்டுச் செல்லுமா என்ற ஐயுறவு தெரிவிக்கப்பட்டது. மேற்படி 13வது திருத்தச் சட்டத்தின் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் பற்றாக்குறை இனப்பிரச்சனைக்கு ஒரு இறுதித் தீர்வை அடைய உதவாது என மறைந்த கலாநிதி நீலன் திருச்செல்வம் மற்றும் வட-கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வர தராஜபெருமாள் ஆகியோர் தெரிவித்த கருத்துக்கள் பற்றியும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தவர்களின் கவனத் திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

*எல். சிவமலர் . கொழும்பு கொட்டாஞ்சேனை*

**இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வு சமஷ்டி அமை ப்பு அடிப்படையில் இருக்கவேண்டுமென்ற கோட் பாட்டிலிருந்து ஐக்கிய தேசியக்கட்சி விலகிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளதே?**

சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு என்பது நோர்வே நாட்டின் ஒஸ்லோ நகரத்தில் இலங்கை அரசிற்கும் எல்ரிரிஈ க்கும் இடையே நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளில் எட்டப்பட்டு "ஒஸ்லோ பிரகடனம்" என அழைக்கப்படும் தீர்மானங் களால் இரு சாரராலும் ஏற்கப்பட்டது. பின்னர் என்ன நடந்ததோ தெரியவில்லை, புலிகளின் கொள்கை வகுப்பாளர் மறைந்த அன்ரன் பாலசிங்கம் பல்டி அடித்து, 2004ம் ஆண்டிலேயே- மூன்று வருடங்களுக்கு முன்னரேயே, "ஒஸ்லோ பிரகடனத்தின் மூலம், பிரிந்து போகும் உரிமையைப் புலிகள் கைவிட்டுவிட்டார் கள் எனக் கொள்வது தவறு" என்ற நிலைப்பாட்டை எடுத்தார். இது பற்றி புலிகளின் இணையத்தளமான **'Tamil Net'** ல் அப்பொழுது வெளியான செய்தி பின்வருமாறு-

விடுதலைப்புலிகள், நிபந்தனை எதுவுமின்றி பிரிந்துபோகும் உரிமையை-அதாவது புறசுயநிர்ணயத்தை- கைவிட்டுவிட்டார்கள் என்பதற்கு ஆதாரமாக அமைந்திருப்பதாக பலராலும் சொல்லப்ப டும் "ஒஸ்லோ பிரகடனம்" என்று ஒன்று இல்லை என எல்ரிரிஈ இன் கொள்கை வகுப்பாளர் அன்ரன் பாலசிங்கம் "போரும் சமாதானமும்" என்ற தனது நூலில், நோர்வேயின் அனுசரணை யுடன் நடந்த சமாதான பேச்சுவார்த்தைகள் தொடர்பாக எழுதியு ள்ள ஒரு பகுப்பாய்வில் குறிப்பிடுகிறார்

இத்தகைய நிலைப்பாட்டுடன், புலிகளின் தலைமைத்துவமானது, "சிங்களக் கட்சிகளுக்கு சமாதான முயற்சிகளில் அக்கறை இல்லை" என்றும், "எல்ரிரிஈ இன்னமும் ஒரு தனிஅரசு உருவாக் குவதில் உறுதியாக இருக்கிறது" என்றும், "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்றும், அவ்வப்போது "பொறுமையின் விளிம்புக்கு வந்து விட்டோம், இன்னுமொரு யுத்தத்தை கட்டவிழ்த்துவிடத் தயார்" என்றும் முழங்கிக்கொண்டும் செயலாற் றும் நிலைமையில், எந்த சிங்கள அரசியல் கட்சியாவது சம ஷ்டி அடிப்படையில் ஒரு அரசியல் தீர்வை முன்னெடுத்தால் அதற்கு சிங்கள மக்களின் ஆதரவு கிடையாது என்பது தெட்டத் தெளிவு. எனவே, சிங்கள மக்களோ, சிங்கள கட்சிகளோ, தமிழர்களுக்கு ஒன்றுமே கொடுக்கமாட்டார்கள் என்று எப்பொழு தும் சிங்கள மக்களையும், சிங்கள கட்சிகளையும் குறைகூறித் திட்டுவதையே நமது தொழிலாகக் கொண்டிராது, பேச்சுவார்த் தைகள் மூலம் சிங்களவர்களினதும் முஸ்லிம்களினதும் அச்சங் களையும், நம்பிக்கையின்மைகளையும் களைந்து, மாறிவரும் சர்வதேச அணுகுமுறைகளைக் கணக்கில் கொண்டு, ஒரு நியாயமான அரசியல் தீர்வுக்கு தமிழர் தரப்பின் பங்களிப்புகள்

கடந்த காலங்களிலும் சரி இப்பொழுதும் சரி என்ன என்பதை யிட்டு தமிழர்கள் சுய விசாரணை செய்தல் மிகவும் அவசியமான தாகும்.

*கே. ராஜசுந்தரம்- யாழ்ப்பாணம்*

**ஈழமக்களின் விமோசனத்திற்காக ஆயுதப் போராட் டத்தை முன்னெடுத்த இயக்கத் தலைவர்கள் தோன்ற முன்னரேயே மக்களின் நலன் கருதி உழைத்தவர் களை நாம் மறந்து விட்டோமே?**

எதுவித பண மோகமோ, பதவி மோகமோ இல்லாது அந்தக் காலகட்ட இனவாத அரசியலிலும், இலங்கை வாழ் மக்கள் அனைவரதும் உண்மையான விமோசனத்திற்காகவும், சுபீட்சத் திற்காகவும் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்து உழைத்து மறைந்த எத்தனையோ நல் மாந்தர்கள் மறக்கப்பட்டு விட்டார்கள் அல்லது மறக்கடிக்கப்பட்டு விட்டார்கள் என்ற உங்களுடைய ஆதங்கம் எனக்கும் உண்டு. இம் மாதம (அக்டோபர்) இலங்கை இடதுசாரி இயக்கத்தின் முன்னோடித் தலைவர்களில் ஒருவரும், சிறந்த ஆசிரியராகவும், சிந்தனையாளருமாகிய விளங்கிய எம் கார்த்திகேசனின் (கார்த்திகேசன் மாஸ்ரர் என அன்புடன் அழைக்கப்பட்டவர்) 30வது நினைவு தினம் கொழும்பு வெள்ள வத்தை பெண்கள் கல்வி ஆய்வு நிறுவன கூடத்தில் நடாத்தப்பட் டமை மகிழ்வை அளித்தது. "அத்தகையோரை நினைவு கூருவ தற்கு நல் மாந்தர்கள் இன்னமும் மிஞ்சி இருக்கின்றார்கள், எனவே மானிடம் இன்னமும் முழுதாக அற்றுப் போகவில்லை, அது சரிந்து போகும்போதெல்லாம் அதனை நிலை நிறுத்த மனிதர்கள் சிலராவது வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்" என்ற எண்ணம் மனதிற்கு புத்துணர்ச்சி ஊட்டியது.

## அரிமண்டு பதில்கள்

பொதுவாகவே, இளவயதில் கம்யூனிஸ்டுகளாக வலம் வந்தவர் கள், காலப்போக்கில் வயதாக "பேராசிரியர்கள்" சிலர் உங்கள் நினைவுக்கு வரலாம்) பொதுவுடமைக் கொள்கைளையும், கோட் பாடுகளையும் கைவிட்டு விட்டதைக் கேள்விப்பட்டிருக்கின்றேன். எனவே, பல வருடங்களுக்கு முன்னர், காத்திகேசன் மாஸ்ரரை, அவரது முதிய பராயத்தில், யாழப்பாணத்தில் ஒருமுறை சந் திக்க நேர்ந்தபொழுது, நான் அவரைக் கேட்டேன்: "இப்பொழுதும கம்யூனிஸத்தில் நம்பிக்கை வைத்திருக்கின்றீர்களா?" அதற்கு அவர், தனது வழமையான சாந்தம் தவழும் புன்னகையுடன், ஆனால் பற்றுதியுடன், சொன்ன பதில்: "அதன் மீதான என் நம்பிக்கை முன்னையை விட இபபொழுது மேலும் வலுவடைந் திருக்கின்றது!"

*ஆர். ரெஜினோல்ட். மன்னார்*

**தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகபிர திநிதிகள் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதன் தெரிவித்துள்ளாராமே?**

"அப்படியானால், மக்களுக்கு ஒருவித பயனுமில்லாமல் பாரா ளுமன்றப் பதவியில் நீங்கள் ஏன் இன்னமும் ஒட்டிக் கொண்டிருக் கிறீர்கள்?"- என்று பகிரங்கமாக மக்கள் கேட்பதற்கு வாய் திறக்க முடியாதவாறு வாழ்கிறார்கள் என்று அவருக்கு நன்றாகத் தெரியும். அடுத்த தேர்தலுக்கும் புலிகளால் வேட்பாளராக நிய மனம் பெறுவதற்கு இப்பொழுதே அவர் அத்திவாரம் போடுகிறார். இப்பொழுது யார் ஏகப்பிரதிநிதிகள் என்பது பற்றிய விவாதம் ஒன்றும் நடக்கவில்லையே! ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர் களின் அரசியல் அபிலாஷைக்கான அரசியல் தீர்வு என்ன என்பதுதானே இப்போதைய விவாதம்!- யார் ஏகப்பிரநிதிகள் என்பதை உறுதிப்படுத்தவா ஈழவிடுதலைப் போராட்டம் வெடித்தது? அப்படியிருக்க, ஏன் இந்த அவ்வப்போதைய "ஏகபிரதிநிதிகள்" ஓலம்.? அவர் சார்ந்த ரெலோ இயக்கத்தின் தலைவர் சபாரத்தி னத்தையும், அவருடன் சேர்ந்து தமிழர் விடுதலைப் போராட்டத் திற்காக தங்கள் பெற்றோர்களையும, உற்றார்களையும், வீடு வாசல்களையும் விட்டு தங்களை அர்ப்பணித்து செயல்பட்ட நூற்றுக்கணக்கான இளம் பிஞ்சுகளையும் படுகொலை செய்த ஒரு இயக்கத்திற்கு- அக் கொடூர செயல்களுக்கு இதுவரையும் ஒரு மன்னிப்புக் கூறாத, கழிவிரக்கம் கொள்ளாத அந்த இயக்கத் தின் தலைமைத்துவத்துக்கு- வால் பிடிக்கும் மானம் மரியாதை எதுவுமில்லாத இவரா தமிழர்களின் மானம் மரியாதையைக் காக்கப் போகிறார்?- விடுங்கள் இந்த விவஸ்தை கெட்டவர்களின் வெட்டிப் பேச்சை!

*எம். கலிவரதன் - ஹட்டன்*

**அனுராதபுர விமானத் தாக்குதலில் பங்குபற்றிய 21 கரும்புலிகளுடனான பிரபாகரன் இருக்கும் புகைப் படம் பார்த்தீர்களா?**



ஆம், பார்த்தேன்!- மத்தியிலிருக்கும் பருத்த பிரபாகரனின் தோற்றத்துடன் ஒப்பிடும்பொழுது ஒல்லிய உடல்வாகுடன இளம் வயதினரான 3 யுவதிகள், 18 வாலிபர் கள்!- ஒரு கல்லூரியின் உதைபந்தாட்ட அல்லது கிரிக்கெட் வீரர்களின் புகைப்படம்போல அது இருக்கிறது. சில வித்தியா சங்கள்- கல்லூரிப் படத்தில் இருக்கும் தலைவன் தானும் சக வீரர்களுடன் மைதானம் இறங்கி விளையாடுவான். ஆனால், இப் படத்தில் இருக்கும் தலைவன் "நீங்கள் முதலில் போய் விளையாடுங்கள், நான் பின்னால் வருகிறேன்" என்று கூறி மற்றைய வீரர்களை மைதானத்திற்கு அனுப்பி விட்டு தான் தன் இருப்பிடம் சென்று தனது மனைவி பிள்ளைகளுடன் இருப்பான். கல்லூரிப் படத்தில் இருக்கும் வீரர்கள், வெற்றியோ, தோல்வியோ, விளையாட்டின் பின் மைதானத்தை விட்டு வெளி யேறுவர். ஆனால், இப் படத்திலிருப்பவர்கள், விளையாட்டின் பின் மைதானத்திலேயே மடிவர். கல்லூரிப் படத்தில் இருக்கும் வீரர்கள் விளையாட்டின் பின்னர், வேறோரு நாள் விளையாடவோ, வாழ்க்கையைத் தொடரவோ முடியும். ஆனால் இப் படத்திலிருக் கும் வீரர்கள், வேறொரு நாள் விளையாடவோ, தங்களது வா ழ்க்கையைத் தொடரவோ முடியாது அந்த மைதானத்திலேயே அவர்களது வாழ்க்கை முடிந்து விடும்!

அந்த அதிரடித் தாக்குதலை நடாத்துவதற்கு வேண்டிய துல்லி யமான திட்டங்கள், அதற்கு உள்ளிருந்தே கிடைத்திருக்க வேண்டிய உதவிகள், அவற்றினைப் பெற்ற விதம், அத் தாக்கு தலில் பங்குபற்றியோரது திறமை, தீரம், ஆகியன வியப்பளித்தன! அவர்கள் நிச்சயமாக இறந்து போவார்கள் எனத் தெரிந்துகொண் டும், அவர்களுடன் சேர்ந்து "போஸ்" கொடுத்து படம் எடுத்ததுடன், தாக்குதல் நடந்த மறுகணமே பிரச்சாரத்திற்காக வெளியிட வைப்பதற்கு எத்தகைய கொடிய, கோர, வக்ர மனம் கொண்டிரு க்க வேண்டும் என்பதும் வியப்பளித்தது! இத்தகைய திறமை படைத்த தமிழ் உயிர்கள் அநியாயமாக பலிக்கடாக்களாக அனுப்பப்படுகின்றனவே, அவர்களின் தியாகம், உயிர் அர்ப்பணி ப்புகளெல்லாம்- இதற்கு முன்னும் இப்படிப் பல தடவைகள் பலிக்கடாக்களாக அனுப்பப்பட்டோரைப்போல்- தலைவனின் ஏகபிரதிநிதித்துவத்தையும், பதவியையும் தக்க வைக்க மட்டு மல்லாது அவர்களைப் பெற்று வளர்த்த பெற்றோருக்கோ, நெருங்கிய உற்றார் உறவினருக்கோ, தமிழ்ச் சமுதாயத்திற்கோ எந்தவித நீண்டகாலப் பயனுமின்றி பாழாகின்றனவே என எண்ணும்போது மனம் வெதும்புகிறது.- போததற்கு அந்த உடல்கள் நிர்வாணமாக, பலியெடுக்கப்பட்ட ஆடு மாடுகள்போல், வண்டிகளில் ஏற்றிச் செல்லப்படுகின்றன. அந்த உயிர்களைக் காவு கொடுத்தவர்கள், அவர்களை ஏவியவர்கள், "குய்யோ, முறையோ", "சர்வதேச சமூகமே பாராயோ" என்று கூக்குரலிடு வதைத் தவிர ஒன்றும் செய்ய முடியாத கையாலாதவர்களாக இருக்கிறார்கள்!- அந்த மொட்டுக்களின் கருக்கலில் குளிர்காய் கிறார்கள்.!

இதில் இன்னுமொரு இரட்டை வேடம்,- முக்கியமாக புலம் பெயர் தமிழரிடையே:- முஸ்லிம் தீவிரவாதிகள் தற்கொலைத் தாக்குதல்களை முன்னெடுத்து உயிர்விடும்போது "அவர்கள் பயங்கரவாதிகள், பின்னாலிருந்து அவர்களை இயக்கும் தலை வர்களின் கைப்பொம்மைகள், இலகுவில் மனச்சலவை செய்யப் படக் கூடிய அப்பாவி இளைஞர்கள்" என்று அவர்களைச் சாடு கிறார்கள்! ஆனால், இப்படித் தமிழ் இளைஞர்கள் தங்கள் உயிரைக் காவு கொடுக்கும்போது, மாவீரர்கள் என்று போற்று கிறார்கள்.!

## கொலைகளை நிறுத்தி.....

*1ம் பக்கத் தொடர்ச்சி*

உமக்கு பொருந்தக்கூடிய ஒரு பொருத தமான தமிழ் பழமொழி "காது கேளாத ஒரு வரின் காதில் சங்கு ஊதுவது" போலாகும்.

நான் எவ்வளவு புத்திமதி கூறினாலும் நீர் அதை செவிமடுப்பதில்லை. தமிழ் ஈழம் அடைய முடியாததென்றும் அப்படி அடைந்து விட்டால் கூட ஒரு நாள்தன்னும் அதை காப்பாற்ற முடியாது என்றும் உமக்கு தெரியும். சர்வதேச சமூகமும் அதை ஒரு போதும் ஆதரிக்காது. அப்படியிருந்தும் ஒருபோதும் அடைய முடியாததும், கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக அடைய முடியவில்லை என அறிந்திருந்தும் பல மனித உயிர்களை பலியிடுவதில் என்ன பயனை அடைய போகின்றீர்.

70-80 ஆயிரம் உயிர்கள் இழக்கக் காரணமாக இருந்து பல்லாயிரக்கணக்கான விதவைகள், அநாதைகள் ஊனமுற்றோ ரை உருவாக்கவும், பல கோடி ரூபா பெறு மதியான சொத்து அழிவுக்கும் காரணமாக இருந்த நீர், இன்று மீண்டும் ஆரம்பித்த இடத்துக்கே வந்துள்ளீர். கிழக்கு மாகாண த்தை முற்று முழுதாக இழந்து விட்டீர். வட பகுதியையும் நீர் இழப்பது உறுதி. ஆனால் சில காலம் செல்லலாம் தமிழீழம் அடைவதற்கல்ல. உமது சுய கௌரவத் தை பாதுகாப்பதற்கான அம் முயற்சியில் வட பகுதியில் வாழும்

தமிழினத்தை முற்றாக அழித்து விடு வீர். தமிழ் சமுதாயமோ அல்லது சர்வதேச சமூகமோ உமது இத்தகைய வழிமுறை களை பாராட்டப்போவதுமில்லை, அங்கீகரி க்கப் போவதுமில்லை. தயவு செய்து எனது ஆலோசனைகளை தீவிரமாக பரிசீ லிக்கவும். இன்னும் காலம் கடந்துவிடவில் லை. இந்திய முறையிலான அல்லது நீர் விரும்பும் ஏதோவொரு வகையான ஒரு நியாயமான தீர்வுத் திட்டம் ஏற்படுவதற்கு உடனடியாக உடன்படவும். நாம் காணும் தீர்வு தவணை முறையில் அமையாமல் எதிர்காலத்தில் மீண்டும் ஒரு போராட்டத்தை ஆரம்பிக்க வழிவகுக்காது ஒரு நிரந்தர தீர்வாக அமைய வேண்டும். மதி கெட்ட இத்தகைய செயல்களில் ஈடுபட முடியுமாக இருந்தால் கணக்கற்ற முறையில் தினமும் நடைபெறும் கொலைகள், ஆட்கடத்தல், பணம் பறித்தல் போன்ற சம்பவங்களில் ஈடுபடுபவர்களை பிடிப்பதற்கு ஏன் முடிய வில்லை. அண்மையில் தென்மராட்சி பல நோக்கு கூட்டுறவு சங்க சமாஜ தலைவர் வெட்டிக் கொலை செய்யபட்டது நீர் அறி ந்ததே. அத்தகையவொரு ஆட்கடத்தல், கொலை சம்பவத்தை காட்டிக்கொடுத்து எத்தகையவொரு குற்றச் செயல்களிலும் உங்களுக்கு சம்பந்தமில்லை என்பதை நிரூபித்துக் காட்டவும்.

தயவு செய்து ஒரு விடயத்தை உணர வும். நான் எந்தக் கொலையையும் கண்டி க்க தவறவில்லை என்பதோடு எக் காரணம் கொண்டும் கொலைகளை மறைக்க உத வுபவனும் அல்ல. எந்தவிதமான கொ லைகளாக இருந்தாலும் அவற்றை நீர் நிறுத்தும் மறுகணமே ஏனைய கொலைச் சம்பவங்கள் தானாகவே நின்றுவிடும்.

**வீ. ஆனந்தசங்கரி**
**தலைவர்- த.வி.கூ**

## அரசியல் தீர்வு......

*1ம் பக்கத் தொடர்ச்சி*

இனப்பிரச்சனை நீடித்துச் செல்லும் போது நாம் கற்பனை பண்ணமுடியா தளவு க்கு நிலைமை மோசமடையலாம் நாம் தீர்மா ணங்களை தெளிவாக எடுக்க வேண்டிய எல்லைகளுக்கு வந்துவிட்டோம். சகிப்புத் தன்மையுடனும் திறந்த மனதுடனும் செயற படுவதினூடாக தற்போது எழுந்துள்ள சூழ் நிலைகளை வெற்றிகொள்ள முடியும்.

இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்ப தற் கான செயற்பாட்டில் இலங்கையின் அனை த்து ஜனநாயக சக்திகளும் இன, மத பேதம் கடந்து ஒருமித்து செயற் படுதலே இன்றுள்ள மிக மிக முக்கிய பணியாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சமாதானமும், ஐக்கியமும் நிலவும் இலங்கையை நோக்கி

சமகால உலகப் போக்கில் இலங்கை இப்படியே சென்று கொண்டிருக்க முடியாது. இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து இந்நாள் வரை இன முரண்பாட்டிலேயே சிக்கி தவித்துக் கொண்டிருக்கிறது. கடந்த முப்பது வருடங்களும் வன்முறையும், போரும் என கழிந்திருக்கிறது. சமாதானத்திற்கான நம்பிக்கைகள் மிக அரிதாகவே காணப்பட்டன. இதனால் எப்போதும் பெருவாரியாக தோற்கடிக்கப்பட்டவர்கள், இழப்புக்களை சந்திததவர்கள் மக்களாகவே காணப்பட்டார்கள்.

பெருமளவு உயிரிழப்புக்கள் சொத்தழிவுகள் மக்களுக்கு ஏற்பட்டன. அதுமாத்திரமல்லால் கெடுபிடி யுத்தம் என்பன சுமத்திய பொருளாதார சுமையையும் அவர்களே சுமந்தார்கள். இன்றும் சுமந்துக் கொண்டு வாழ்கிறார்கள்.

மக்களின் வாழவில் ஏற்படும் மறுமலர்ச்சியே நாட்டின் சுபிட்சமாகிறது. ஆனால் எமது மக்கள் மகிழ்ச்சியாக இல்லை. கடந்த மூன்று தசாப்தங்களாக அமைதியிழந்த வாழ்வே மக்களுக்கு கிட்டியிருக்கிறது. இழப்புக்களுடனான. இவ்வாழ்வில் இடையிடையே மத்தாப்பும் மின்னல் கீற்றுக்கள் போல் சொற்ப கணங்களுக்கு அமைதி வந்து போயிருக்கிறது. ஆனால் அவர்களின் இழப்புக்கள் இழப்புக்கள்தான். இழப்புக்களுக்குப் பின் அவர்களின் வாழ்வு மறுசீரமைக்கப்பட்டதா என்றால் அதுவுமில்லை. மேலும் மேலும் இழப்புக்களும் அவநம்பிக்கைகளும்தான் ஏற்பட்டன.

மக்களின் விடுதலை என்று கூறிக்கொண்ட புலிகள் அமைப்பு மக்கள் மீது ஒரு அதிகாரம் செலுத்தும், அவர்கள் மீது சுமைகளை ஏற்றும், அவர்களை அன்றாடம் துன்புறுத்தும் பேரின்னல்களுக்கு உட்படுத்தும் பாசிச கட்டமைப்பாக உருவாகியிருந்தது. காலத்தினூடே அது மக்களின் வாழ்வின் மீது பெரும் அனர்த்தங்களையும் நாசகார விளைவுகளையும் ஏற்படுத்தியது.

இந்த மூன்று தசாப்தங்களில் அரசுகள் எனப்படுபவை மக்களின் பிரச்சினைகளுக்கு குறிப்பாக இனப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண தவறிவிட்டன. 1987 இல் இந்தியாவின் அனுசரணையுடன் இலங்கை-இந்திய அரசுகள் கைச்சாத்திட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அதிகாரப் பகிர்வு யோசனைகளை புலிகள் நிராகரித்தது மாத்திரமல்லாமல் அதற்காக ஏற்படுத்தப்பட்ட கட்டமைப்புக்களையும் சீர்குலைத்தார்கள். இதேபோன்று 1995 இல் சந்திரிகா அவர்கள் ஜனாதிபதியாக இருந்தபோது பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து விட்டு சடுதியாகவே சண்டையல் இறங்கினார்கள்.

எனினும் 2000ம் ஆண்டளவில் சந்திரிகா அவர்களால் ஒரு தீர்வு யோசனை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட போது எதிர்க்கட்சியான ஐ.தே.க பாராளுமன்ற மேசையிலேயே அதனை தீயிட்டு கொழுத்தியது. தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தியதாக கூறியவர்கள் அதனை புறக்கணித்தனர்.

இதன் பின்னர் 2002 இல் ஒஸ்லோவில் சர்வதேச அனுசரணையுடனான சமஷ்டி முறையான தீர்வொன்று பற்றி ஒப்புக்கொள்ளப்பட்டு இருந்தும் புலிகள் அதனை நிராகரித்தனர்.

தற்போது ஜனாதிபதியால் இனப்பிரச்சினைக்கு தீர்வு யோசனைகளை முன்வைப்பதற்கு அமைக்கப்பட்ட சர்வகட்சி பிரதிநிதிகள் குழு தனது பணியை ஆரம்பிக்கும் போதே இதில் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆக்கபூர்வமாக பங்களிக்க தவறிவிட்டது.

கடந்த பதினெட்டு ஆண்டுகளுக்கு மேலாக இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்த வடக்கு கிழக்கு நீதிமன்றத்தினூடாக பிரிக்கப்பட்டபோது இவர்கள் கூக்குரலிட்டார்கள். ஆனால் இந்தியாவின் அனுசரணையுடன் இந்த இணைப்பு மேற்கொள்ளப்பட்டபோது அதிகார பகிர்ந்தளிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது இதே புலிகளும் அவர்களின் முகவர்களும் அதனை நிராகரித்தார்கள்.

அதிகார பகிர்ந்தளிப்பு தொடர்பாக தமிழர்கள் மத்தியில் பொதுவாக ஒரு கொள்கை எப்போதும் இருந்ததாக இல்லை. அவ்வப்போதைக்கு சந்தர்ப்பத்திற்கேற்ப எதையாவது சொல்வது பின்னர் மறந்துவிடுவது என்பதே பொதுவான போக்காக காணப்பட்டது.

ஆனால் ஆக்கபூர்வமாகவும், யதார்த்தபூர்வமாகவும் அதிகார பகிர்ந்தளிப்பிற்காக பலர் செயற்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஈவிரக்கமின்றி புலிகளால் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். தலைவர் அமிர்தலிங்கம், கலாநிதி நீலன் திருச்செல்வம், தோழர் பத்மநாபா போன்றவர்களின் பங்களிப்பை இவ்வகையில் குறிப்பிடமுடியும்.

சுமார் 25வருடங்களுக்கு முன்னர் ஆயுதமேந்திய போராட்டம் நடைபெறாத காலத்தில் இருந்த நிலவரங்களை விட மக்கள் இன்று மிக மோசமாக பலவீனமடைந்துள்ளனர். எதையும இரந்து கேட்கும் நிலைக்கு தமிழ்ச்சமூகம் தள்ளப்பட்டுள்ளது. இந்த நிலை பிரதானமாக புலிகளாலேயே உருவாக்கப்பட்டது. புலிகள் தமிழ் மக்களுக்கு பெற்றுக்கொடுத்த விடுதலை இந்த லட்சணத்தில்தான் இருக்கிறது.

வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் மாத்திரமல்ல முஸ்லீம், மலையக மக்களும் தமது கோரிக்கைகளை வலுவான நிலையில் முன்வைக்க முடியாத அளவிற்கு சமூக, அரசியல் நிலவரம் சீர்குலைந்துள்ளது.

இது நேர் சீர் செய்யப்படுவதும் சிறுபான்மை சமூகங்களிடையே ஒரு புரிதல் ஏற்படுவதும் மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்படுவதும் ஒரு பரந்த வெகுஜன இயக்கம் கட்டியெழுப்பப்படுவதும் அவசியமானது.

இன்றைய அராஜக சூழலில் அது சாத்தியமா என்ற யதார்த்தமான கேள்வி எழவே செய்கிறது. தடம் புரண்டுபோன பாதையில் இருந்து மீளவேண்டும், பாதை செப்பனிடப்படப்பட வேண்டும். ஜனநாயக உறவுமுறை கட்சிகளிடையே நிலவ வேண்டும்.

இவை ஒவ்வொன்றுக்குமாகவே நாம் பெரும் பிரயத்தனங்களையம் போராட்டங்களையும் நடத்த வேண்டும். இது கடினமானது. ஆனால் இதைவிட வேறுவழி கிடையாது.

தற்போது நிகழ்பவற்றில் ஆக்கபூர்வமானவற்றிற்கு உறுதுணையாக இருந்து கொண்டு ஒரு பரந்த ஐக்கியம் கடடியெழுப்பப்பட வேண்டும். அதில் இலங்கையில் ஜனநாயகத்தையும், சமூகங்களிடையே நல்லுறவையும் விரும்பும் அனைத்து பிரிவினரும் உள்ளடக்கப்பட வேண்டும். சிங்கள, தமிழ், முஸ்லீம், பறங்கி, மலாய் கிறிஸ்த்தவர், இந்து, பௌத்தர், இஸ்லாமியர் என இன, மத, மொழி அடையாளங்களுக்கு அப்பால் இத்தகைய வலுவான ஐக்கியமொன்று கட்டியெழுப்பப்பட வேண்டும். சமூகங்களிடையே பரஸ்பர புரிதல் ஏற்படுத்தப்பட வேண்டும்.

சகலவிதமான காட்டுமிராண்டித்தனங்கள், இன பகைமை பாராட்டல், மேலாதிக்க வகைப்பட்ட அதிகார அகங்கார உணர்வுகள் இவற்றை புறந்தள்ளி மனிதர் என்ற வகையில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இது கடினமானதும் மிக நீண்டகாலம் எடுக்கக்கூடியதுமான பணி. ஆனால் ஏதோவொரு இடத்தில் ஏதோவொரு கட்டத்தில் ஜனநாயகத்தையும், மனித கண்ணியத்தையும் நேசிப்பவர்கள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான ஆரம்ப அடிவைப்புக்களை செய்தாக வேண்டும்.

## மட்டக்களப்பு மக்களின்.....

*01ம் பக்கத் தொடர்ச்சி*

- மீனவர்களின் ஜீவாதார தேவைகளை நிறைவு செய்தலும் அவர்களுக்கான புனர்நிர்மாணப் பணிகளும்.
- அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்தி நியாயமான விலையில் மக்களுக்கு பொருட்கள் கிடைக்க வழிவகைகளை செய்தல்.
- கேள்விப் பத்திரங்கள் மக்களுக்கு தெரிந்தவையாக, வெளிப்படையானதாக இருத்தல்.
- மக்கள் மீதான வன்முறைகள், அத்து மீறல்களை தடுத்தல், சுதந்திரமாக வாழ்வதற்கான சூழ்நிலைகளை ஸ்தாபித்தல்.
- நட்டத்தில் இயங்கும் கூட்டுறவு சங்கங்களுக்கு மட்டக்களப்பு மாவட்ட நிலைமையை கருத்திலெடுத்து நிதியுதவி செய்தல்.
- பட்டப்படிபை முடித்தவர்களுக்கு நியமனம் கிடைக்க ஏற்பாடு செய்தல்.
- யுத்த சூழ்நிலையில் கொல்லப்பட்ட வர்களுக்கான நட்ட ஈடுகள் ஏனைய பிரதேசங்களில் வழங்கப்படுவது போல் பாரபட்சமில்லாமல் வழங்க ஏற்பாடு செய்தல்.
- மட்டக்களப்பில் நிலவும் நிலப்பிரச் சனைக்கு சமூக கொந்தளிப்புக்கள் ஏற்படாத வகையில் நியாயமான முறையில் சுமூகமான தீர்வு காணுதல்.
- மட்டக்களப்பு மாவட்டத்தின் நீண்ட கால குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு எட்டப்பட வேண்டும்.
- வர்த்தகர்கள எதிர்நோக்கும் பிரச்சினைகள்.

# "இறுதி யுத்தத்திற்கு" நிதியுதவி செய்தல்

**புலம்பெயர்ந்த தமிழர்களிடம் புலிகள் இயக்கத்தின் அச்சுறுத்தல்களும் பலாத்கார பணப்பறிப்பும் தொடர்பாக 2005 அக்டோபர் தொடக்கம் 2006 பெப்ரவரி வரை கனடா, இங்கிலாந்து ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் சிறார்கள் உரிமைகள் பிரிவின் நியாயப் பிரச்சாரப் பணிப்பாளர் ஜோ. பேக்கர் அவர்களால் எழுதப்பட்டு மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் பல்வேறு பிரிவுகளின் பணிப்பாளர்களாலும் பரிசீலிக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட அறிக்கை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பினால் வெளியிடப்பட்டது. அவ்வறிக்கை தொடராகப் பிரசுரிக்கப்படுகின்றது.**

### நிதி திரட்டுதலும் பலாத்கார பணப்பறிப்பும்

**உலக தமிழர் இயக்கத்தின் பதில்கள்**

**(சென்ற இதழ் தொடர்ச்சி)**

புலிகள் யாழ்ப்பாணம் அல்லது கிளிநொச்சியில் உள்ள புலிகள் இயக்கத்தின் உள்ளூர் காரியாலயத்திற்கு அவ் அனுமதி அட்டையுடன் செல்ல வேண்டும் எனக் கூறப்படுகின்றது.

வெளிநாட்டில் இருந்து சென்றவர்கள், புலிகள் இயக்க காரியாலயத்தில் தாங்கள் எவ்வளவு காலம் வெளிநாடுகளில் வாழ்ந்தோம், அங்கு சொந்த வீடு வைதிருக்கிறோமா, சம்பள விபரங்கள், தமது தொழில் உரிமையாளர் மற்றும் வீட்டு முகவரி, தொலை பேசி மற்றும் தனது பெயர் என, சகல தனிப்பட்ட விபரங்களையும் தெளிவாக வழங்க வேண்டும்.

கடந்த காலத்தில் புலிகள் இயக்கத்திற்கான அவர்களின் நிதிப் பங்களிப்புக்கள் பற்றி தகவல்கள் அவர்களிடம் கேட்கப்படுகின்றன. அவ்வாறான தமது பங்களிப்புக்கள் பற்றி தெளிவான கணக்கு வழக்கை கூற முடியாத பட்சத்தில். ஒரு குறிப்பிட்ட பணத்தொகை அவர்களிடம் கூறப்பட்டு, புலிகளுக்கு இவ்வளவு தொகை நீங்கள் "தருமதி" இருக்கிறது என்று சொல்லப்படுகின்

அத்தொகையானது ஒருவருக்கொருவர் வித்தியாசப்படுகின்ற அதே வேளை, அவர்கள் மேற்கு நாடுகளில் வாழ்ந்த காலத்தை கணக்கிட்டு அதில் ஒரு நாளைக்கு ஒரு டொலர், ஒரு பவுண்ட் அல்லது ஒரு யூரோ என்ற அடிப்படையிலேயே அது கணக்கிடப்படுகின்றது. மிக நீண்ட காலமாக மேற்கு நாடுகளில் வாழ்ந்த நபர்களுக்கு அவர்களால் கூறப்படுகின்ற தொகையானது கணிசமானதாகக்கூட இருக்கலாம். உதாரணமாக டொரண்டோவில் 20 வருடமாக வாழ்ந்த ஒருவர் 7,300 கனேடிய டொலர்களை செலுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படலாம். அல்லது அவர்கள் மீண்டும் அந் நாடுகளுக்கு திரும்பியதும் மாதாந்தம் ஒரு குறிப்பிட்ட தொகையை செலுத்துவதற்கான இணக்கப்பத்திரம் ஒன்றில் கையெழுத்திட வேண்டும் என அழுத்தப்படுகின்றனர்.

1990 களின் முற்பகுதியில் இலங்கையை விட்டு வெளியேறிய பிரியா (உண்மைப் பெயரல்ல) தற்போது டொரன்டோ பகுதியில் வசிக்கிறார். பத்து வருடங்களுக்கு மேலான காலத்தின் பின்பே, 2005 நடுப்பகுதியில் அவர் இலங்கையின் வட பகுதியில் உள்ள தனது பெற்றார் ஒருவரையும் சகோதர சகோதரிகளையும் பார்ப்பதற்காக கொழும்பில் இருந்து தரைமார்க்கமாக வடக்கே பயணித்தார். அவர் மனித உரிமை கண்காணிப்பு அமைப்பிடம் கீழ் கண்டவாறு சொன்னார்.

ஒவ்வொரு குடும்பமும் 1,000 ரூபாய்கள் வழங்கி அனுமதி அட்டை(PASS) ஒன்றை பெற்றுக் கொள்ள வேண்டும், என அச்சோதனைச் சாவடியில் வைத்து அவர்கள் எம்மிடம் சொன்னார்கள். அடுத்து நாங்கள் எங்கள் ஊருக்கு போய் சேர்ந்த பின்னர் புலிகள் இயக்கத்தின் காரியாலயத்துக்குச் சென்று எம்மைப்

கொடுக்க வேண்டும். நான் 1,000 ரூபாயையும் என் பெயரையும் கடவுச் சீட்டு இலக்கத்தையும் கொடுத்தேன.

இரண்டாவது நாள் புலிகள் இயக்கத்தின் காரியாலயத்திற்குச் சென்றேன். அங்கே அவர்கள் என்னிடம், நான் எவ்வளவு காலம் வெளிநாட்டில் வசிக்கிறேன். அங்கு வசித்த காலத்தில அவர்களுக்கு ஏதாவது நிதி பங்களிப்புச் செய்திருக்கிறேனா எனக் கேட்டார்கள். நான் அப்படிச் செய்யவில்லை என்று கூறினேன். நான் நலன்புரி (welfare) உதவியில் சீவிப்பதாகவும் எனக்கு பிள்ளைகள் இருப்பதாகவும நான் கூறினேன். அந்த நிலைமையில் மிகவும் கஷ்டங்கள் இருந்ததால் நான் பணம் கொடுக்கவில்லை என்றும் கூறினேன்.

"நீர் திரும்பிச் சென்றதும், கட்டாயம் பணம் செலுத்த வேணடும். எமது போராட்டத்திற்கு உதவி செய்ய வேண்டும். எங்களுக்கு உதவி செய்வது உங்கள

த்தினர் என்னிடம் கூறினர். நான திரும்பிச் சென்றதும் மாதாந்தம் பணம் செலுத்துவதாக கூறினேன். நான் அவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நின்றபடியால் அதை ஏற்றுக் கொண்டேயாக வேண்டும் என்று உணர்ந்தேன். அவ்வாறு ஏற்றுக் கொள்ளாவிட்டால் அவர்கள் அந்த நேரததிலேயே பணத்தை தரும்படி கட்டாயப் படுத்தலாம், என அச்சப்பட்டேன். மாதம் ஒனறுக்கு 50 டொலர்கள் தர வேணடும் என அவர்கள் கேட்டனர். என்னால் 50 டொலர்கள் தர முடியாமல் இருக்கும் என்று கூறினேன். 30 டொலர்கள் தருகிறேன் என்றேன். இறுதியாக அவர்கள் மாதம் ஒன்றுக்கு 40 டொலர்களுக்கு இணங்கியதோடு அப்பணத்தை உலகத் தமிழர் இயக்கத்திடம் நான் கொடுக்க வேண்டும் என கூறினர்.

ஒரு படிவத்தை நிரப்பி என்னை கையொப்பம் இடும்படி அவர்கள் கூறினர். அதில் எனது பெயர், வீட்டு முகவரி, நான் கொடுப்பதற்கு இணங்கிய தொகை என்பன உள்ளடக்கப்பட்டு இருந்தன. நான் அந்தக் காரியாலயத்தில் நின்றபொழுது அததைச் செலுத்தும்படி கேட்கப்டுவதை நான் கண்டேன். ஆனால எனது வட்யத்தில் நான் பின்னர் பணம் செலுத்துவதை அவர்கள் ஏற்றுக் கொண்டனர். சிலவேளை நான் அவர்களிடம் கதைத்த விதத்தினால் அப்படி நடந்திருக்கலாம்.

www.tamilarangam.net



# உலகம் அறியாத புலிகளின் குரூர சித்திரவதை

**ஈபிஆர்எல்எவ் உடன் தொடர்புடையவர் என புலிகளால் கைது செய்யப்பட்டு சித்திரவதைகளை அனுபவித்த ஒருவரின் கண்ணீர் கதை புலிகளின் வதைமுகாமிலிருந்து தப்பிய அவர் எழுதி வெளியிட்ட "ஆயுதங்கள் மேல் காதல்கொண்ட மனநோயாளிகள்" என்ற சிறு பிரசுரத்தின் ஒருபகுதி**

( சென்ற இதழ் தொடர்ச்சி )

3

யாழ் போதனா வைத்தியசாலையில் சவக் கிடங்கில் வேலை செய்துவந்த ஆறு சிற்றூழி யர்களை புலிகள் கைது செய்திருந்தார்கள். இந்திய அமைதி படையினரால் கொல்லப்படும் புலிகளின் பிணங்களை வைத்தியசாசை சவக்கி டங்கில் வைத்திருக்கும் போது அவற்றைத் தாம் கடத்திச் செல்வதற்கு ஒத்துழைக்காத காரணத்துக்காக மேற்படி அறுவரும் கைது செய்யப்பட்டார்கள்.

வேலணை காட்டுப் பகுதியில் கிராம அபிவி ருத்திப் பணிகளில் ஈடுபட்டு வந்த நாதன் என்பவர் கிராம அபிவிருத்திசம்பந்தமான கலந்ரையாடல் களை **EPRLF** இயக்க மேற்படி பகுதி அமைப் பாளர்களுடன் இணைந்து நடத்தியிருக்கிறார். இக்கலந்துரையாடல்களின் போது புகைப்படம் எடுக்கப்பட்டது. அதை அத்தாட்சிப் படுத்தி நீ **EPRLF** ஆதரவாளன். பல புலிகளை காட்டிக் கொடுத்தாய் என குற்றஞ்சாட்டப்பட்டு சிறையில டைக்கப் பட்டுள்ளார்.

புலிகளினால் கொலை செய்யப்பட்ட யாழ்ப் பாண முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் உதவியாளர் நெல்லிநாதன் வயது சுமார் 65 பருத்த சரீரம் கொண்ட இவர் கடுமையான நோயாளியும் கூட. யாழ் மாவட்ட **EPRLF** நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உதவி யாளராக இருந்ததாக குற்றஞ் சாட்டப்பட்டிருந் தார். இவர் மூலம் பல தகவல்களைப் பெறமுடி யும் என புலிகள் நம்பியிருந்தனர்.

வடக்கு கிழக்கு மாகாண அரசின் முதலமை ச்சர் வரதராஜப்பெருமாள் அவர்கள் பதவியேற்று யாழ் நகருக்கு வந்தபோது பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக் கூட்டத்தில் அவருக்கு மாலை அணிவித்ததற்காக ஒருவர் கைது செய் யப்பட்டிருந்தார். மேலே கூறப்பட்டவை ஒரு சில சம்பவங்களே, ஆனால் வெறும் ஐயப்பாட்டிலும், கோபதாபங்களிலும் கூட பலர் கைது செய்யப் பட்டிருந்தார்கள்.

இப்படியான குற்றச் சாட்டுக்களின் பேரில் 3000க்கு மேற்பட்ட அப்பாவிப் பொது மக்கள் வட மாகாணம் முழுவதும் கைது செய்யப்பட் டார்கள் பிள்ளை தமக்கெதிரான இயக்கத்திலிரு ந்தால் தந்தை கைது செய்யப்படுவார். தந்தை இல்லாவிடில் தாய் கைதாகி பெண்களுக்கான சிறையிலடைக் கப்படுவார். **EPRLF, ENDLF, TELO, PLOTE** ஆகிய இயக்க உறுப்பினர்கள் சிலரும் கைதாகி சிறையிலிருந்தனர். சாவகச்சே ரிப் பகுதியில் மூன்று பெரிய சிறை முகாம்கள் அச்சமயத்தில் இருந்ததாக அறிந்தேன். நான் இருந்த சார்ள்ஸ் சிறைமுகாம், பொஸ்கோ சிறை முகாம், பெண்களுக்கான தனி சிறை முகாம், இப் பெண்கள் சிறையில் மாற்று இயக்க உறுப் பினர்களின் தாய்மார், சகோதரிகள், மனைவிமார், சிறு பிள்ளைகள் ஆகியோர் அடைக்கப்பட்டிருந் தனர்.

சார்ள்ஸ் முகாமில் நான் இருந்தபோது பொ றுப்பாளர் சார்ள்ஸ் பல தடவை என்னை அடித் தார். அவர் ஒரு மனோவியாதி பிடித்தவர் போன் றோ அல்லது வெறி பிடித்தவர் போன்றோதான் செயல்படுவார். யாராவது கைதியைப் பிடித்து அடித்துக் கொண்டிருப்பதுதான் அவரின் வேலை. தூஷண வார்த்தைகளைத் தவிர அவருக்கு வேறு பேச்சே தெரியாது. பத்து அடி நீளம் பன்னிரண்டு அடி அகலமான சிறிய அறை ஒன்றுக்குள் இருநூறு கைதிகளை வைத்து சுமார் பத்து மணித்தியாலங்கள் அடைத்து வைத்திருப்பார். ஒவ்வொரு நாளும் பத்து பத்து கைதிகளைத் தெரிந்தெடுத்து மாறுகால் மாறுகை யை ஒன்றாக பிணைத்து விலங்கு பூட்டுவார். அதாவது வலது காலுடன் இடது கையைப் பிணைந்து விலங்கு பூட்டுவார். அப்படி விலங் கிடப்பட்ட கைதிகள் நடந்து திரிய விடப்படுவார் கள். அவர்கள் பெரிதும் சிரமப்பட்டு நடந்து திரி வதைப் பார்த்து சிரித்து மகிழ்வார். கைதிகளை அடித்துத் துன்புறுத்திக் கொண்டு சிரித்து கேலி பண்ணுவார்.

டேய் பு. மக்களே உங்கள் அம்மாமாரை இந்திய ஆமிக்கு விட்டனீங்ளாடா? எனக் கேட்டு அடிப்பார். ஒரு நாளைக்கு பத்து பேருககாவது மண்டை உடைக்காவிட்டால் தனக்குத் தூக்கம் வராது எனக் கூறி கைதிகளின் மண்டையை உடைப்பார். இப்படியான வெறிபிடித்த பொறுப் பாளர் ஒருவரின் கீழ்தான் சாவகச்சேரியில் நான் கைதியாக இருந்தேன்.

ஒரு நாள் எல்லாக் கைதிகளும் வரிசையாக நிறுத்தப்பட்டோம். சிறிது நேரத்தில் விசாரணை க்குப் பொறுப்பாளராக இருந்த சலீம் எனும் புலி ஒருவர் தனது மெய்க்காப்பாளர் சகிதம் வந்து எம்மைப்பார்வையிட்டார். உங்களைச் சந்திக்க **EPRLF** பிரமுகர் ஒருவர் வருகிறார். அவர் சொல்வது போல் நீங்கள் நடந்துக்கொண் டால் உங்களுக்கும் நல்லது எமக்கும் வேலை கள் எளிதாக இருக்கும் என்றார்.

முகுந்தன் என்ற அந்த **EPRLF** உறுப்பினர் கையிலும் காலிலும் விலங்கிடப்பட்ட நிலையில ஆயுதம் தாங்கிய புலிகள் காவலாக வர அழை த்து வரப்பட்டார். அவர் பலமாகத் தாக்கப்பட்டிரு ந்ததுடன் மூளைச்சலவை செய்யப்பட்டிருந்தார். அவர் சகல கைதிகளுக்கும் முன் நிறுத்தப்பட்டு சொற்பொழிவாற்ற விடப்பட்டார்.

தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு இனி வேறு இயக்கங்கள் எதுவும் இயங்க முடியாது, எனவே புலிகளுடன் ஒத்துழைக்கவும் சொன்னார். ஆயுதங்கள் இருந்தால் ஒப்படைக்கும்படியும் ஆயுதங்கள் புதைத்து வைத்திருந்த இடங்கள் தெரிந்தால் காட்டிக் கொடுக்கும்படியும் கூறினார். இவரின் பேச்சுக்களில் புலிகளின் மிரட்டல்களுக் காகத்தான் செயற்படுகிறார், என்பதை சொல்லா மல் சொன்னார். அதன் பின் இயக்கங்களில் முக்கியப் பொறுப்புக்களில் இருந்தவர்களில் இறந்தவர்களை அடையாளம் காட்டும்படி ஒரு அடையாள அணிவகுப்பு நடைபெற்றது. முகுந் தன்தான் கைதிகளை அடையாளம் காட்டினார். அதில் அடையாளம் காட்டப்பட்டவர்கள் தனியாக அடைக்கப்பட்டார்கள். முகுந்தன் எங்கு கொண்டு செல்லப்பட்டாரோ தெரியாது.

*(அடுத்த இதழில் தொடரும்)*



# காந்தி

## வாழ்க்கைச் சித்திரம்

### பி.ஆர். நந்தாவின் நூலில் இருந்து

**"காந்தி வாழ்க்கைச் சித்திரம்" நூல் பி.ஆர். நந்தா எழுதி என்.ஜே. ராஜாமணியினால் தமிழாக்கம் செய்யப்பட்டு, இந்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. மகாத்மா காந்தியின் வாழ்க்கை வரலாற்றை படம்பிடித்துக்காட்டும் இந் நூல், கண்ணோட்டத் தில் தொடராக பிரசுரிக்கப்பட்டு வருகின்றது. அதன் ஒருபகுதி இவ்விதழில் பிரசுரமாகிறது.**

காங்கிரஸின் இளைஞர் அணி யை முன்னின்று நடத்திய பெங்கா லைச் சேர்ந்த இளம் தலைவர் சுபாஷ சந்திரபோஸ், மோதிலால் நேருவின் மகன் ஜவஹர்லால் ஆகியோர் அந்தி யர் ஆட்சிக்கு உட்பட்ட சுய ஆட்சி அந்தஸ்தை ஒப்புக்கொள்ள மறுத்தனர். காந்தியின் சமரச திட்டத்தினால் டிசம் பர் 1928-ல் நடந்த கல்கத்தா காங்கிர ஸில் பிளவு ஏற்படுவது தவிர்க்கப்பட் டது. நேரு அறிக்கைக்கு சம்மதம் தெரிவிக்கும் ஒரு தீர்மானம் நிறைவேற ற்பட்டது. டிசம்பர் 31, 1929 வரை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாவிட்டால் காங்கிரஸ் பூரண சுதந்திரத்திற்காக, தேவையானால் வன்முறையற்ற ஒத் துழையாமை மூலம் போராடும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கல்கத்தா காங்கிரஸ், காந்தி அரசி யலில் திரும்ப வருவதற்கான வழி வகுத்தது. பிரிட்டிஷ் அரசாங்கம் காங் கிரஸின் கோரிக்கையை ஏற்றுக்கொ ள்ளாவிட்டால் அவ்வாறு செல்வதற்கு வாய்ப்புக்கள் மிகக் குறைவு. காங்கிரஸ எல்லோரும் அறிந்தபடி, காந்தி மட்டுமே நடத்தக்கூடிய ஒத்துழையாமை இயக் கத்ததை காங்கிரஸ் நடத்தும் என தெரிவிக்கப்பட்டது.

மே 1929-ல் பிரிட்டிஷ் பொதுத் தேர்தல் முடிவுப்படி, ராம்சே மாக்டோ னால்ட் தலைமையிலான தொழிலாளர் கட்சி ஆட்சிக்கு வந்தது. வைஸ்ராய் இர்வின் பிரபு, இங்கிலாந்து சென்று விட்டு, 1929 அக்டோபர் இறுதிவாக் கில் இந்தியா திரும்பியபோது ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில், அர சியல் முன்னேற்றத்திற்கான இந்தியா வின் இயற்கைப் பிரச்சினை அங்கு யோசிக்கப்பட்டபடி அந்நிய ஆதிக்கத் திற்குட்பட்ட சுய ஆட்சி பெறுவதே என்று 1917ம் ஆண்டு பிரகடனத்தில் மறைமுகமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை இந்தியாவில் பெரிதும் வரவேற்கப்பட்டது. ஆனால் இங்கிலாந்திலோ இர்வினுக்கும், லேபர் அரசாங்கத்திற்கும எதிராக ஒரு புயலே உருவாயிற்று. பிரிட்டிஷ் செய்தி நிறு வனங்களும், பாராளுமன்றமும் இந்த அறிக்கையை நீடித்த புனர் ஆய்வுக்கு உள்ளாக்கின. எச்சரிக்கையுடன் பேசிய அரசு செய்தி தொடர்பாளர்கள் இந்த அறிக்கைக்கு அவ்வளவு முக்கியத்து வான கோரிக்கைகள் நிறைவேற்றப் படவில்லை. டிசம்பர் 31, 1929-ன் நள்ளிரவில், புத்தாண்டு விடிந்தபோது ராவி நதிக்கரையில் இந்திய தேசிய காங்கிரஸ், சுதந்திரக் கொடியை பறக்க விட்டது. மத்திய மாகாண சட்ட மன்றங களிலுள்ள தங்கள் உறுப்பினர்களை தத்தம் பதவிகளை ராஜினாமா செய் துவிட்டு அதிகாரபூர்வமாக சட்ட மறுப் புப் போராட்டத்தை தொடங்குமாறு காங்கிரஸ் அவகளுக்கு அதிகாரம் வழங்கி கேட்டுக் கொண்டது.

கொள்கையினின்று ஏதும் வியத்தகு மாற்றம் இல்லை என்றும் உறுதிப் படுத்தினர். அரசாங்கத்திற்கும் காங் கிரஸுக்கும் ஏற்பட்ட பிளவு சரி செய் யப்படாமல் அப்படியே இருந்தது. லா கூர் காங்கிரஸ் கூட்டத்திற்கு முன்பு டிசம்பர் 23 அன்று தில்லியில் காந்தி யும் வைஸ்ராயும் ஒருவரையொரு வர் புரிந்துக் கொள்ளவென, கடைசி நிமிட த்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நேரடி பேச்சுவார்த்தைகள் யாதொரு பலனும் அளிக்கவில்லை.

**பூரண சுதந்திரப் போராட்டம**

லாகூர் மாநாடு ஒரு மிகவும் முக்கி யத்துவம் வாய்ந்ததாக இருந்தது. காந்தி கேட்டுக்கொண்டதன் பேரில் அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஜவர்ஹர்லால் நேருவை கட்சித் தலைவராக தேர்ந்தெடுத்தது, புது நம்பிக்கையையும் உற்சாகமும் பெற்ற காங்கிரஸுக்கு அதற்கு தலை மை தாங்க ஒரு இளைஞர் தேவை இருந்தது. பளிங்கைப் போன்று தூய் மையான..சந்தேகத்திற்கிடமின்றி உண்மையான.. அப்பழுக்கற்ற, பழகு வதற்கு இனிமையான போர் வீரர் என காந்தி வர்ணித்த நாற்பது வயதான ஜவஹர்லால், பினணட்களில் அவரது அரசியல் வாரிசாக ஆனார். இருபது வருடங்களும் வெகுவாக வேறுபட்ட அறிவார்ந்த பின் புலங்களும் அவர் களைப் பிரித்தாலும் கூட, அவ்விரு வரிடையேயும் ஆழ்ந்த அன்பு பிணை ப்பு இருந்தது.

கல்கத்தா காங்கிரஸ் கொடுத்த கெடு முடிந்துவிட்டது. பிரிட்டிஷ் ஆதிக கத்திற்கு உட்பட்ட சுய ஆட்சி தரப்பட

ஜனவரி 1930-இல் தான் இரவு பகலாக தீவிரமாக சிந்திப்பதாக காந்தி எழுதினார். முதல் நடவடிக்கையாக ஜனவரி 26 அன்று சுதந்திர தினம் கொண்டாடப்பட வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். அன்றைய தினம் இந்தியாவின் நகரங்கள், கிராமங்க ளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள ஆங்கில அரசுக்கு அடிபணிவது மனிதனுக்கும், கடவுளுக்கும் இழைக் கும் குற்றம் என்று சபதம் எடுத்துக் கொண்டனர். சுதந்திர தினத்தை அனு சரித்ததன் மூலம் வெளிப்பட்ட தேசத் தின் உள்ளார்ந்த உற்சாகத்தால் காந்தி ஊக்கமடைந்தார். மாபெரும் மக்கள் இயக்கத்திற்குத் தேசம் தய ராக இருக்கிறது என்று அவர் உணர் ந்தார். உப்புச் சட்டங்களை மீறுவதுடன இயக்கத்தைத் துவங்கலாம் என்று அவர் ஆலோசனை தெரிவித்தார். உப்பு வரி அவ்வளவு கடினமாகத் தோன்றாவிட்டாலும் நாட்டிலுள்ள மிக வும் வறுமையானவர்களை அது பாதி த்தது. ஆனால் உப்பு தேசிய விடுதலை போராட்டத்தோடு அவ்வளவாக ஒட்ட வில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# எம் நினைவுகளின் தோழர் வீ.ஏ.கே



தோழர் வீ.ஏ. கந்தசாமி மறைந்து 15 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. அவர் மிக சிறு பராயத்தில் அரசியல் சமூக இயக்கத்தில் தன்னை ஈடுபடுத் திக் கொண்டவர். இலங்கை கம்யூனி ஸ்ட் கட்சியின் அங்கத்தவராக தனது பணியை ஆரம்பித்தவர். குறிப்பாக வட பகுதியில் தண்டாமைக்கு எதிரான போராட்டங்களில் தொழிலாளர் விவ சாயிகளை சமூக மாற்றத்திற்காக அணி திரட்டுவதில் அயராது பாடுபட் டவர். பொன் கந்தையா, சண்முகதாசன், கார்த்திகேசு மாஸ்ரர், எம்.சி. சுப்பிரமணி யம், ஏ.எஸ். சுப்பிரமணியம், பூபால சிங்கம் எழுத்தாளர் டேனியல், நாகரட் ணம் இன்னும் எண்ணற்ற இடதுசாரிக ளுடன் இணைந்து செயற்பட்டவர். தென்னிலங்கையிலும் அவர் பல இடது சாரி தலைவர்களுடன் பரிச்சயத்தை ஏற்படுத்திக் கொண்டவர்.

சோவியத்யூனியனுக்கும், சீனாவுக் கும் அவர் விஜயம் செய்திருக்கிறார். மக்கள் சீனததின் காலஞ்சென்ற தலை வர் மா ஓ சேதுங் அவர்களை அவர் நேரடியாக சந்தித்திருக்கிறார்.

60களின் முற்பகுதியில் இலங்கை கம்யூனிஸ்ட் இயக்கத்தில் பிளவு ஏற் பட்டபோது அவர் சீன சார்பு கம்யூனி ஸ்ட் கட்சியில் இணைந்து செயற்பட் டார். வடக்கில் நிகழ்ந்த தீண்டாமை ஒழிப்பு எதிர்ப்பு போராட்டங்களில் தே நீர் கடை பிரவேச போராட்டங்களில், கோயில் பிரவேச போராட்டங்களில் நிலவுடமையாளர்களால் அவர்கள் கொத்தடிமைகளாக நடத்தப்படுவதற்கு எதிரான போராட்டங்களில் முன்னணி யில் நின்றவர். இப் போராட்டங்களின் போது அவர் பொலிசாரால் தாக்கப்பட்ட சம்பவங்களும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்ட சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

இளம் பொதுவுடமைவாதிகளை உருவாக்குவதில் தோழர் வீ.ஏ. கந்த சாமி ஒரு காத்திரமான பங்களிப்பை வழங்கியிருந்தார். ஆவரால் உருவாக் கப்பட்ட பலர் இன்றும் சமூக அரசியல இயக்கங்களில் ஈடுபாடு செலுத்துகிறார் கள்.

1980களின் பின்னர் எழுந்த சூழ் நிலைகளில் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடுவதும், கத்தை நிலைநாட்டுவதும் என்ற அரசி யல் செயற்பாடுகளிலும் அவர் ஈடுபட் டார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் இணைந்து கிராம, நகர தொழிற்சங்கங்களை உருவாக்கும் பணியில் தானே முன்னின்றார்.

1986 டிசம்பரில் புலிகள் ஈழ மக் கள் புரட்சிகர விடுதலை முன்னணியை தடை செய்த போது உரும்பிராய் அலுவலகத்தின் மீது கிரனேட் வீச்சு தாக்குதல் நடத்தினர். அத் தாக்குதலில தோழர். கந்தசாமி காயமடைந்தார்.

அவர் வடக்கு கிழக்கு மாகாண சபையில் அங்கத்துவராகவும் இருந்த வர். ஈழ தொழிற்சங்க சம்மேளனத்தை அவர் முன்னின்று வடக்கு கிழக்கில் அமைத்தார்.

அவர் தனது வாழ்வு முழுவதும் பிரமச்சாரியாகவே வாழ்ந்தார். அவர் தனது 60 களில் சென்னை அண்ணா நகரில் சக தோழர் ஒருவரின் வீட்டில் மாரடைப்பால் மரணமானார். இந்தியா வில் தங்கியிருந்த தோழர்கள், பல் வேறு அரசியல் கட்சிகள், கம்யூனிஸ்ட கட்சிகள் ஆகியவற்றின் தலைவர்கள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு அஞ சலி செலுத்தினார்கள். அவரது பூதவு டல் இறுதியாக புழல் அகதிகள் முகா மில் வைக்கப்பட்டு கிரியைகள் புழல் மயானத்தில் நிகழ்ந்தன.

ஒரு மனிதன் எப்படி வாழ வேண் டும் என்று வாழ்ந்து காட்டிச் சென்றவர் தோழர் கந்தசாமி.

தோழர் கந்தசாமி போன்றவர்கள் தமிழ் சமூகத்தினுள் ஏற்படுத்திய தாக் கங்கள் பங்களிப்புக்கள் முக்கியமான வை. இவை விரிவாக ஆய்வு செய்

www.tamilarangam.net



# இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வுக்கான

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (பத்மநாபா) முன்வைத்துள்ள பிரேரணைகள்

### அரசியல் யாப்பு சீர்திருத்தத்துக்கான அனைத்துக் கட்சி கமிட்டியினதும் நிபுணர்கள் குழுவினதும் பரிசீலனைக்கு முன்வைக்கப்பட்டவை

*(சென்ற இதழ் தொடர்ச்சி..)*

### 7E வெலிஓயா திட்டத்தினை மீள் வடிவமைத்தல்

i) முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டத்திற்குள் உள்ளே அமைந்திருக்கும் வெலி ஓயா திட்டத்தின் நிலப்பகுதி மீள்வடிவமைக்கப்பட்டு, அதன் மூலம். முன்னைய தமிழ்க் கிராமங்கள் 1984க்கு முன்னர் இருந்த நிலைமைக்கு மீளவும் கொண்டுவரப்படல் வேண்டும். பயன்பாட்டுக்குள் கொண்டு வரப் பட்டுள்ள அரச நிலங்கள் அந்தந்த மாவட்டங்களில் நிலவிய இனவிகிதாசாரப்படி, அந்தந்த மாவட்ட மக்களுக்கே முன்னுரிமை வழங்கி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

i)i இங்கு பயன்பாட்டுகளுள் கொண்டு வரப்பட்டுள்ள அரச நிலங்களில் உண்மையாகவே 10 வருடங்களுக்கு முன்னரே நிரந்தரமாகக் குடியேறி, அதேவேளை தமது முன்னைய கிராமங் களில் நிலமோ, வீடோ இல்லாது இங்கு வதியும் சிங்கள விவசாயக் குடும்பங்கள் மட்டும் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் தொடர்ந்து சட்டரீதியாக வாழ ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 7F திருகோணமலை எல்லைக் கிராமங்களை மீள் வரை செய்தல்

இனங்களுக்கிடையேயான சனத்தொகை விகிதங்களை, அரச உதவியுடனான திட்டமிட்ட குடியேற்றங்கள், திருகோண மலை மாவட்டத்திலும் மிகப்பாரிய அளவில் பாதித்துள்ளன. 1950களில் அல்லை-கந்தளாய் பகுதிகள் முழுவதுமே பெரு மளவில் சிங்களப் பகுதிகளாக மாற்றப்பட்டதுடன், 1976இல் திருகோணமலை மாவட்டத்தில் சேருவாவில தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டது. 1960களிலும், 1970களிலும் திருகோண மலை நகரிலும் அதனைச் சார்ந்த பகுதிகளிலும் சிங்களக் குடியேற்றங்கள் விஸ்தரிக்கப்பட்டன.

ஆனாலும், இப்பகுதிகளில் தற்போது வாழும் சிங்கள மக்களின் இயல்பு வாழ்க்கையைக் குலைக்கும் எதுவித நடவடி க்கைகளையும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கோரவில்லை. எனினும், அத்திட்டங்களினால் விளைந்த பாதகங் களினைக் கருத்திற் கொண்டு செயற்படுவதற்கான தீர்வுகளாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பின்வருவனவற்றை முன் மொழிகிறது-

திருகோணமலை, பொலநறுவை மாவட்டங்களின் எல்லைப் பிரிவுகளில் உள்ள, சிங்கள மக்களைப் பெரும்பான்மையாக கொண்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் மற்றும் கிராம சேவகர் பிரிவுகள் அடையாளம் காணப்பட்டு, அவை வட-மத் திய மாகாணத்துடன் இணைக்கப்படல் வேண்டும். அதே வேளை யில், இப்படியான மீள்சரிசெய்தல், வவுனியா முதல் திருகோண மலை, திருகோணமலை முதல் மட்டக்களப்பு வரையிலான ஒருங்கிணைந்த வடக்கு-கிழக்கு மாகாண நிலப்பரப்பின தொடர்ச் சிக்கு இடையூறாக இருக்காது என்பது நிச்சயப்படுத்தப்பட வேண்டும்.

### 7G கிழக்கின் எதிர்காலம்

வடக்கு-கிழக்கு மாகாண ஒருங்கிணைப்பிற்காக ஆரம்பம் தொட்டு இருந்து வரும் முதலானதும் நியாயமானதுமான காரணமும் அதற்கான தற்போதைய தேவையும், அப்பிரதேசத்து மக்கள் யாவரும், குறிப்பாக தமிழ் மக்கள், தாங்கள் காலாகால மாக வாழ்ந்துவரும் தமது சொந்த இருப்பிடங்களில் சமாதானம், ஜனநாயகம்,ஸ்திரம் ஆகியவை நிலவ வேண்டும் என்பதேயா கும். வெளியேற்றப்பட்ட சகல தமிழ் மக்களும், முஸ்லீம் மக்களும் மறுபடியும் அவரவரது பாரம்பரிய வாழ்விடங்களில் குடியேற்றப்பட்டு அவர்கள் தங்கள் சுயநம்பிக்கையை மீண்டும் பெற்றதன் பின்னர், கிழக்கின் தமிழ்-முஸ்லிம்-சிங்கள தலைவர் கள் ஒருங்கிணைந்து கலந்தாலோசித்தும் கிழக்கின் எதிர்காலம் பற்றித் தீமானிக்கலாம்.

### 7H ஒருங்கிணைந்த வடக்கு-கிழக்கே இலங்கையின் ஐக்கியத்தை வலுவாக்கும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் ஏற்பாடுகள், ஓர் ஐக்கிய இலங்கைக்குள் சிறுபான்மையான தேசிய சமூகங்களின் பாது காப்பிற்கும் அவர்களுடைய நலன்களையும் அபிலாஷை களையும் பேணி வளர்ப்பதற்கும் அவசியம் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டியது பிரதானமானதாகும். எனவே, தீர்வுகளை அணுகும் பொழுது, அவை புலிகள் பற்றிய மருட்சி நிலையின் அடிப்படையில் இருக்கக் கூடாது. அநேகரால் விரும்பப்படும் அரசியல் கட்டமைப்புக்கான தீர்வானது ஒரு தனிநாட்டை சிருஷ்டிக்க முயற்சிப்பவர்களிடம் கையளிக்கும் நோக்கிலான ஒன்றல்ல அல்லது வடக்குகிழக்கு வாழ் மக்களை புலிகளின் பயங்கரவாதத்திடம் கையளிக்கும் விடயமுமல்ல. அவ்வாறான எண்ணத்துடன் அணுகுவது ஒரு நியாயமான அரசியற் தீர்வை காணும் முயற்சியில் தவறுகளையே உண் டாக்கும்.

பன்முகப்பட்ட அரசியல் வழிமுறைகளின் மூலம், மக்க ளின் பல்வேறு பகுதியினரதும் வெவ்வேறுபட்ட நலன்களை சமமாகத் திருப்திப்படுத்துவதுடன், நாட்டின் ஐக்கியத்தை யும் இறைமை யையும் பேணி வளர்த்து, இலங்கையை ஒரு பல் லின மக்களின் ஐக்கிய தேசமாக உருவாக்குவதே ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தூர நோக்காகும். இவ் வண்ணமான ஓர் அரசியற் தீர்வாகும்.

முரண்பாடுகளுக்கு எதிராக இயங்கி, யுத்தத்தை நலிவ டையச் செய்து, சமாதானமும் ஜனநாயகமுமான சூழ்நிலையை நிலைநிறுத்தி, சகல சமூகத்தினரதும் நாடு முழுவதற்கு மான சுபீட்சத்திற்கு வேண்டிய கட்டுமானங்களையும், பாரம் பரியங் களையும் கட்டியெழுப்பல் வேண்டும். எந்தத் தீர்வும் எல்லாக் குழுவினரையும் ஒரே சமயத்தில் திருப்திப் படுத்த முடியாது. எனினும், நியாயமானதும் நீதியானதுமான தீர் வொன்றினைக் கண்டு, அதனை நம்பிக்கையுடனும ஊக்க முடனும் எல்லோரும் ஒருங்கிணைந்து செயலாற்றி ஸ்தா பிப்பதன் மூலந்தான், பலதரப்பிலும் இருக்கும் தீவிரவாத சக்திகளின் செயல்களுக்கு முட்டுக்கட்டை போட முடியும்.

**சிங்கள மக்களின் நலன்களில் நேர்மையானதும் உண்மையானதுமான அக்கறையும், அதேவேளை தமிழ் மக்களுக்கு எதுவித பங்கமும் ஏற்படுவதை விரும்பாத சிங்களத் தலைவர்கள், இத்தகைய ஒழுங்குகளையே உசிதமாகக் கொள்வார்கள்** என ஈ.பி.ஆர்.எல்.எவ் எதிர் பார்க்கின்றது. சிங்களமக்களின் தலைவர்கள், கடந்த காலத்தை யும் சமகாலத்தையும் புரிந்துகொண்டு, இலங்கை யினது சகல மக்களிதும் நலன்களுக்காக, விவேகத்துடனும் துணிவுடனும் உறுதியுடனும், நியாயமானதும், நீதியாதுமான ஓர் அரசியற் தீர்வை அளிப்பார்கள் என்பதே தமிழ்மக்களது எதிர்பார்ப்பாகும்.

இலங்கைவில் நிலவும் சமூக அரசியல் வளர்ச்சியின் யதார்த் தங்களையும், தமிழ்மக்களின் நிலைமைகளை யும் புரிந்துகொள்ளும்படி, தமிழ்மக்களின் தலைவர்களை யும ஈ.பி.ஆர்.எல்.எவ். வேண்டுகிறது. நாகரீகம், அறிவு, பொறுப்பு ஆகியவை வாய்ந்த எந்த மனிதனுமே, இரத்த தாகம் கொண்ட யுத்த வெறியர்களுக்கு உதவக் கூடாது. சமாதா னத்தையும் ஜனநாயகத்தையும் எட்டுவதற்கு, விட்டுக் கொடுப்புகள், இணக் கப்பாடு, கருத்தொற்றுமை ஆகியவற் றுடன் பரஸ்பர அபிலா ஷைகள், மற்றவர்களுடைய அச்சங்கள் ஆகியவற்றையும் அங்கீகரிப்பது முக்கிய மானதும் தவிர்க்க முடியாததுமாகும்.

### 08 மாகாண சட்ட சபை

1) ஒவ்வொரு மாகாண சபையும் இரண்டு அவைகளை கொண்டதாக இருக்கும்-

i) **மாகாண சட்டசபை**

ii) **தேசிய சமூகங்களின் மாகாண அவை**

2) பாராளுமன்றத்திற்கே உரியதாக சட்வாக்க நிரல்களில் ஒதுக்கப்பட்டவற்றைத் தவிர, மற்றைய அனைத்து விடயங்கள் சம்பந்தமான சட்டங்கள், சாசனங்களை மாகாண சட்டசபையே உருவாக்கும். உடன்பாட்டு **(Concurrent List)** நிரலில் பட்டிய லிடப்பட்ட விடயங்கள் தொடர்பான சட்டங்கள் மற்றும் சாசனங் களையும் அவை தொடர்பான நாடாளுமன்றத்தின சட்டங்களுக்கு உடன் பாடான வகையில் மாகாண சட்சபைகள் உருவாக்கும்.

3) மாகாண சட்டசபைகள், நாடாளுமன்றத்திற்கோ அல் லது மத்திய அரசுக்கோ அடங்கிச் செயற்படும் நிறுவனங்களா கக் கொள்ளப்படக்கூடாது, நாட்டின் ஒட்டுமொத்தமான ஆட்சிக் கட்டமைப்பின் முக்கிய பகுதிகளாகவே அவை கருத்தப்படவும் நடாத்தப்படவும் வேண்டும்.

4) மாகாணத்தின் முதலமைச்சரின் எழுத்து மூலமான வேண்டுதலின் பேரிலேயே, ஆளுநர், மாகாண சட்ட சபையை கூட்டவோ, கலைக்கவோ, அல்லத ஒத்திப் போடவோ முடியும்.

### 09. ஆளுநர்

1) மாகாணத்தின் முதலமைச்சருடனும் எதிர்க்கட்சித் தலைவருடனுமான உடன்பாட்டின் பிரகாரம், ஐந்து வருடங் களுக்கு என ஜனாதிபதியினால் ஆளுநர் நியமிக்கப் படுவார். ஜனாதிபதியின் மாகாண அளவிலான பிரதிநிதியாகவே ஆளுநர் செயற்படுவார்.

2) சட்டங்களாலும் சாசனங்களாலும் குறிப்பிடப்பட்ட உத்தியோகப் பற்றற்ற பதவிகள் தவிர, வேறு அரசு நிறுவனங்க ளிலோ அல்லது தனியார் நிறுவனங்களிலோ, ஊதியமோ இலாபமோ பெறும் பதவிகளை ஆளுநராக இருப்பவர் வகிக்கக் கூடாது. அரசாங்க உத்தியோகத்தில் இருக்கும் ஒருவர் ஆளுநர் பதவிக்கு நியமிக்கப்படும் பட்சத்தில், அவர் தனது உத்தியோக த்திலிருந்து நிரந்தரமாக ஓய்வுபெற்றவராகக் கருதப்படுவதுடன், பின்னர், அவர் மத்தியஅரசினது அமைச்சர் ஸ்தானத்திற்கு குறைவான அரசாங்கப் பதவிகள் எதற்கும் மறு நியமனம் செய்யப்படக் கூடாது.

3) மாகாண சட்டசபை, மாகாண அரசாங்கம், மாகாண பொதுநிர்வாகம், பொலீஸ் நிர்வாகம், நீதிநிர்வாகம் ஆகியவ்வை அடங்கலான, மாகாண அரசு அமைப்பின் சம்பிரதாயத் தலைவ ராக ஆளுநர் இருப்பார்.

**4) ஆளுநர், மாகாண நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு சம்பிர தாயத் தலைவர் மாத்திரமே. மாகாண முதல மைச்சரினது அல்லது அமைச்சரவையினது ஆலோசனை யின் பேரில் மட்டுமே அவர் நிறைவேற்று அதிகாரங்களை உபயோகிக்கலாம்.**

5) ஜனாதிபதியின் சார்பில் செயல்படும் ஆளுநர் மாகாண த்தின் அரசியல் யாப்புக் கண்காணிப்பாளர். எனவே, எந்த அலுவலகமும், எவரும் ஆளுநரின் ஜனாதிபதியுடனான தொடர்பு களில், குறிக்கிடவோ, அவை பற்றி கேள்விகள் எழுப்பவோ முடியாது.

**6) இடைக்கால கண்காணிப்பு அரசாங்கத்தின் உரு வாக்கம** முதலமைச்சரின் ஆலோசனையின் பிரகாரம், மாகாண சட்டசபை ஆளுநரால் கலைக்கப்படும் பட்சத்தில், மறு தேர்தல் முடிந்து புதிய அரசாங்கம் உருவாகும் வரை **தொடர்ந்து பதவியிலிருக்கும்படி, முதலமைச்சரை ஆளுநர் கோர வேண்டும்.**

மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம், பெரும்பான் மையை இழந்தும் வேறொரு மாற்றுக் கட்சிக்கு பெரும்பான்மை இல்லாததுமான நிலையில், ஜனாதிபதியால் நியமிக்கப்படும் **ஆலோசகர்களுடன் இடைக்கால கண்காணிப்பு அரசாங்கத் தின் தலைவராக ஆளுநரே செயல்பட வேண்டும்.**

7) ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்படும் பட்சத்தில், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஜனாதிபதி தனக்கு விரும்பிய, ஆனால் அந்த அரசாங்கத்தின் எந்த அங்கத்திலும் அப்பொழுது வேலை செய்து கொண்டிருப்பவர்களை உள்ளடக்காத, வினை த்திறன்சார் ஆலோசனைக் குழு ஒன்றினை ஆளுநருக்கு நியமிப்பார்.

8) தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் பதவியில் இருக்கும் போது. ஜனாதிபதிக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கும் அதிகாரம் தவிர, ஆளுநருக்கு பிரத்தியேகமான தன்னிச்சையாகத் தீர்மானி க்கும் அதிகாரங்கள் எதுவும் கிடையாது.

9) தனது பதவிக்காலத்திலோ, பதவி முடிந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரோ, கட்சிசார் அரசியலிலோ அல்லது ஓர் அரசியற் கட்சியின் நடவடிக்கைகளிலோ ஆளுநர் ஈடுபடக் கூடாது.

10) ஓர் ஆளுநர் மீளவும் நியமிக்கப்படலாம். ஆனால், ஏவ்வித சந்தர்ப்பமாயினும், ஓர் ஆளுநரின் மொத்தப் பதவிக்கா லம் பத்து வருடங்களுக்கு மேலாக அமையக் கூடாது.

### 10. மாகாண அரசாங்கம் ▯

1) மாகாண சட்டசபைகள், சட்டவாக்க அதிகாரங்கள் கொண்ட அனைத்து விடயங்களிலும், மாகாண அரசாங் கங்கள் நிறைவேற்று அதிகார உரிமைகள் கொண்டிருக் கும்.

(குறிப்பு:- மத்திய அரசாங்கத்தின் நிறைவேற்று அதிகாரங்க்ள் நாடாளுமன்றத்தினால் மட்டுமே சட்டவாக்க அதிகாரங்கள் உடைய விடயங்களில் மட்டுமே இருக்கும். இது, அரசியல் யாப்பில் உடன்பாட்டு நிரல் என ஒன்று இருக் கும் பட்சத்தில், அந்த உடன்பாட்டு நிரலில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான சட்டவாக்க, நிறைவேற்று அதிகாரங் கள் பற்றிய குழப்பங்களையும், குளறுபடிகளையும் நீக்குவதற்கு அவசியமாகும். **இந்த உடன்பாட்டு நிரலுக்கு "இணை நிரல் அல்லது பொது நிரல்"** என்ற வியாக்கியானத்தைக் **கொடுப்பது, மாகாண அரசாங்கங்களை சிறுமைப் படுத்த வும், மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களை மறைமுக மாகப் பெருக்குவதற்கும் வழிவகுக்கும்.**

2) மாகாண ஆட்சியின் முதலமைச்சர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டு, தனது சத்தியப்பிரமாணத்தை ஜனாதிபதி முன்னிலையிலேயே எடுத்துக் கொள்வார்.

3) ஆளுநர், அமைச்சர் அவையின் உறுப்பினர்களை முதலமைச்சரின் வேண்டுகோளின் பிரகாரம் நியமிப்பார் மற்றும் பதவி நீக்கவும் செய்வார்.

4) மாகாண முதலமைச்சரும் மந்திரி சபையும், மாகாண சட்ட சபைக்குக் கூட்டுப் பொறுப்புள்ளவர்களாகவும், பதிலளிப் பவர்களாகவும், கணக்குகள் காரணங்கள் காட்டுபவர் களாகவும் செயலாற்றக் கடப்பாடு உடையவர்களாவர்.

5) மாகாண அரசாங்கத்தின் முதலமைச்சர், மாகாண சட்ட சபையில் பெரும்பான்மையான ஆதரவைக் கொண்டிருக் கும் வரை தொடர்ந்து பதவி வகிப்பார். அவரது பெரும்பான்மை ஆதரவு பற்றிய விவகாரம் சட்டமன்றத்தில் வாக்களிப்பின் மூலம் மட்டுமே நிர்ணயிக்கப்படலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இலங்கை தலித் மேம்பாட்டு முன்னணி விடுத்துள்ள

# தலித் அறிக்கை

**இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக தீவிரமாக பேசப்பட்டு வரும் வேளையில் வடக்கு கிழக்கில் காலம் காலமாக அடக்கி ஒடுக்கப்பட்டு வரும் தலித் மக்களின் பிரச்சினைகள், அதற்கான தீர்வுகள் குறித்தும் பேசப்பட வேண்டும் என தலித் மக்களின் மேம்பாட்டுக்காக குரல் கொடுத்துவரும், பிரான்ஸை தளமாக கொண்டு இயங்கும் இலங்கை தலித் மேம்பாட்டு முன்னணி தெரிவித்து வருகின்றது. இதுகுறித்து 12.11.2006 இல அவர்கள் வெளியிட்டுள்ள எழுத்து மூல ஆவணமான தலித் அறிக்கை எமது சென்ற இதழில் பிரசுரமாகியிருந்தது. அதன் மற்றொரு பகுதி இந்த இதழில் வெளியிடப்படுகின்றது.**



ஒக்டோபர் 20, 21ம் திகதிகளில் பாரிசில் நடைபெற்ற தலித் மேம்பாட்டு முன்னணியின் மாநாடு

1965 இல் அருந்ததியர் சங்கம், சலவைத் தொழிலாளர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், திருவள்ளவர் மகாசபை போன்ற பல சங்கங்களினால் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி என்னும் பொது அமைப்பு உருவாக்கப்பட்டு 1966 இல் அச்சுவேலியில் ஒரு மாநாட்டையும் நடாத்தியது. அம் மாநாட்டின் இறுதி முடிவாக தலித மக்கள் யாழ் உயர் சாதி மககளுக்குள் இரண்டாம்தர மக்களாக கருதும் நிலைப்பாட்டிற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அத் தீர்மானத்தின் போது அம் மாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருந்த தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ் கட்சி பிரதிநிதிகள் அத் தீர்மானத்தின் பிரகாரம் தலித் மக்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தமக்கு மூன்று மாதம் அவகாசம் தரும்படி கேட்டுக்கொண்டனர். பின்பு அது அவர்களின் இயல்பான சமூக-அரசியல் ஏமாற்று நடவடிக்கைதான் என்பதை காலம் எமக்கு உணர்த்தியது.

3

சர்வதேச ரீதியில் ஏற்பட்ட இடதுசாரிக் கோட்பாட்டு முரணபாடுகளின் நிமித்தம் சீனக் கம்யூனிஸ்ட், ரஷ்ய கம்யூனிஸ்ட் எனும் பிளவு நிகழ்ந்த நிலையில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியிலும் அப்பாதிப்பு நிகழ்ந்தது. அதன் காரணமாய் சீனச் சார்பினர் சிறுபான்மைத் தமிழர் மகாசபையை விட்டு விலகினர். இதில் அங்கம் வகித்தவர்களாலேயே ஜன இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் அமைப்பாளராக கே.டானியல் பணியாற்றினார். இதன் முதலாவது மாநாடு 21-10-1967 இல் யாழ்ப்பாண நகர மண்டபத்தில் அமைந்த சின்னர் கார்த்திகேசு அரங்கில் நடைபெற்றது. சங்கானை தேநீர்க்கடை பிரவேசத்தின் போது ஏற்பட்ட கலவரத்தினால் கொல்லப்பட்ட கார்த்திகேசுவே அவராகும்.

1967இல் பொன்னாலை கிராமத்திலுள்ள தலித் மக்கள் குடிநீர் பெறுவதற்கு மறுக்கப்பட்டதன் காரணமாக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் சாதி வெறியர்கள் மட்டுமன்றி, அதிகாரிகள தமிழ் தலைவர்கள் யாவரும் ஒன்றிணைந்து அப் போராட்டத்தை நசுக்க முற்பட்டனர். இறுதியில் சிறீலங்கா அரசின் தலையீட்டால் குழாய்க் கிணறு அமைத்துக் கொடுத்ததன் ஊடாக அப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டது.

1967இல் ஆரம்பிக்கப்பட்ட சங்கானை போராட்டமானது 1968 வரை பரவலாக வட பகுதி முழுவதும் பரவியது. அதன் விளைவால் நிச்சாமம் எனும் கிராமத்தில் வண்ணியன் குமரேசு அவர்கள் சாதி வெறியர்களின் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியானார். இவரது உடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட வேளையிலும் பல தலித்துக்கள் தாக்கப்பட்டு படுகாயங்களுக்கு உள்ளான போதும் தொடர்ந்து ஊர்வலமாகச் சென்று அவரது உடல அடக்கம் செய்யப்பட்டது. சங்கானைப் போராட்டத்தின் போது பல்வேறு துன்பங்களை தலித் மக்கள் அனுபவித்த நிலையில், அவர்களின் துன்பத்தில் பங்குகொள்ளும் பொருட்டு யாழ்ப்பாணம் வந்துதவியவர்களில் கம்பஹா எம்.பி யாகவிருந்த எஸ்.டி. பண்டாரநாயக்கா அவர்களும் தாழ்த்தப்பட்ட தலித் தமிழர்கள் சம்பந்தமான போராட்ட வழக்குகளில் ஆஜராவதற்கு யாழ்ப்பாணத் தமிழ் மேட்டுக்குடிச் சட்டத்தரணிகள் எவருமே (அப்புக்காத்துகள்) உதவ முன்வராத நிலையில் பிரயாணச் செலவை மட்டும் ஏற்று எமது தலித் மக்களுக்காக யாழப்பாணம் வந்து வழக்குகளை நடத்தியவர்கள் வண்டி சொய்சா, எச்.எம். கரவித்த போன்ற சிங்களச் சட்டத்தரணிகளும் என்பதை இவ்வறிக்கையினூடாக நாம்பெருமையுடன் அழுத்திக் கூறுகின்றோம்.

சாவகச்சேரியில் சாதிவெறியர்கள் தலித்துக்கள் மீது தொடர்ந்தும் தமது தாக்குதலை நிகழ்த்திய வண்ணம் இருந்தனர். இதில் சாதி வெறியர்களுக்கு ஆதரவாக தமிழரசு கட்சியினர் திரைமறைவில் இயங்கி வந்தனர் என்றும் தெரியவருகிறது. 1968இல் மந்துவிலில் நிகழ்ந்த சாதி வெறியர்களின் கொடுமைகளுக்கு எஸ். இரத்தினம் என்பவர் பலியாக்கப்பட்டார். இக்கால கட்டத்தில்தான் தீண்டாமை ஒழிப்புப் போராட்ட செயல்பாடுகளில் ஒன்றான மட்டுவில் பன்றிதலைச்சி அம்மன் ஆலய பிரவேசப் போராடம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் போராட்டமே தமிழ் மக்கள் மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது ஆயுதப் போராட்டமாகும். இதில் பங்கு கொண்டவர் செல்லக்கிளி என்னும் பெண் போராளியாகும்.

இவர் நாட்டு வெடிகுண்டொன்றை தண்ணீர் குடத்துள் மறைத்து வைத்து கோவிலினுள் சென்று அக்குண்டை வெடிக்க வைத்தார். மூன்று மாதங்களாக தொடர்ச்சியான போராட்டத்தின் மூலம் அவ்வாலயம் தலித்துக்களுக்காக திறந்து விடப்பட்டது. அதைத் தொடர்ந்து மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆலயப் பிரவேசப் போராட்டமும் ஆரம்பிக்கப்பட்டது. அரச அதிகாரிகள், பொலிஸ் நிர்வாகம் போன்ற அரச இயந்திரங்களின் துணையுடன் உயர் சாதியினர் அம் முயற்சியை அடக்க முயன்றனர். இருப்பினும் அவர்களது கடும் கட்டுப்பாடுகளையும் மீறி சின்னையா என்னும் தலித் குடிமகன் ஒருவர் கோவிலுக்குள புகுந்து உட்கார்ந்து கொண்டார்.

**(மிகுதி அடுத்த இதழில் தொடரும் ..)**

# அவர்கள் கௌரவமாக தங்கள் புர்வீக நிலத்துக்கு அழைத்து வரப்பட வேண்டும்



வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மக்கள் கடந்த 17 வருடங்களாக வார்த்தைகளால் வர்ணிக்கப்படாத வேதனைகளுடனும் துன்ப துயரங்களுடனும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பாராம்பரியமாக பல நூற்றாண்டுகளாக வடக்கில் வாழ்ந்த முஸ்லீம்கள் சுமார் முப்பதாயிரம் குடும்பங்கள் சில மணி நேர அவகாசத்தில் வேருடனும், வேடி மண்ணுடனும் பெயர்க்கப்பட்ட துயரம் அந்த சமூகத்தினரின் ஒருபகுதியினராக இருந்து அனுபவித்துப் பார்த்தால்தான் புரியும். அது மிகவும் அவலமானது.

17 வருடங்களுக்கு முன்னர் அவர்கள் வேரோடு பிடுங்கியெறியப்பட்டபோது சிறுவர்களாகவும், இளைஞர்களாகவும் இருந்தவர்கள் இன்று பெரியவர்களாகி இருப்பார்கள். பிறந்த மண்ணிலே தவனம் வைத்திருந்த வயோதிபர்கள் அந்த மண்ணிலே வாழ்ந்து அந்த மண்ணிலே மடியவேண்டுமென கனவு கண்டவர்கள். நிராசையுடன் மரணத்திருப்பார்கள். அவர்கள் பலாத்காரமாக உடுத்த துணியுடன் வெளியேற்றப்பட்ட அந்த காலத்திலும், அதற்கு பின்னரும் பிறந்த குழந்தைகளுக்கு எங்கள் ஊர் எது, எங்கள் வேர் எது, எங்கள் வாழ்வெது என்று கேட்கும் சின்னஞ்சிறு பிள்ளைகளுக்கு நேற்று வாழ்ந்த அந்த வாழ்வை விளங்க வைப்பதை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள். அது கல்லையும் கலங்க வைக்கும் துயரம்.

பாரதியின் வார்த்தைகளில் கூறுவதானால் "எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே அவர் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடித்ததும் இந்நாடே" என்ற ஏக்கமும், நேசமும், பெரு

அகதிகளாக புத்தளத்திலும், அனுராதபுரத்திலும், கொழும்பிலும் வேறு தென் பிரதேசங்களிலும் வாழும் வடக்கு முஸ்லீம் மக்களுக்கு இருந்து கொண்டுதான் இருக்கும்.

தமிழர்களுக்கு இத்தகைய அனுபவங்கள் பலதடவை ஏற்பட்டிருந்தும் வடக்கு முஸ்லீம்களின் துயரத்தை உணர முடியாமல் போனது மிகவும் அவலமானது.

நாஜிகளால் சொல்லொணா துன்பங்களை அனுபவித்த யூதர்களுக்கு பாலஸ்தீனர்களின் துயரம் புரியாமல் போனது போல்தான் இங்கு வடக்கு முஸ்லீம்களின் துயரம் தமிழர்களுக்கு விளங்காமல் போனது. இது மிகவும் அவமானகரமானது. ஒரு சமூகத்தின் சுதந்திர வாழ்வை அலட்சியம் செய்யும் சமூகம் தான் சுதந்திரமாக இருக்க முடியாது. இதனை இந்த நாட்டு சிங்களவர்கள் மாத்திரமல்ல தமிழர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மக்கள் மீளக் குடியேற்றப்படுவது என்பது இனப்பிரச்சனை தீர்வுக்கு நிகராக தனித்துவமாக முக்கியத்துவமளித்து செயற்படுத்தப்பட வேண்டிய விடயமாகும்.

# சேகுவேரா உலக மானிடத்தின் விடியலின் முகம்

உலகின் உன்னத மானிட நேயனும் லத்தீன் அமெரிக்காவின் சுதந்திரத்திற்கான கடந்த நூற்றாண்டின் மத்தியகால குரலுமாக இருந்த சேகுவேரா படுகொலை செய்யப்பட்டு நாற்பது ஆண்டுகள் உருண்டோடிவிட்டன.

ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டுமென்று வாழ்ந்து காட்டிச் சென்றவர் சேகுவேரா. ஆர்ஜென்டீனாவில் பிறந்து கௌதமாலாவில் கல்வி கற்று கியூபாவில் புரட்சி வென்று பொலிவியாவில் மரணித்தவர் சேகுவேரா. லத்தீன் அமெரிக்காவின் நீள அகலங்கள் அவருக்கு நன்கு பரிச்சயமானவை. பெரு நகரங்களில் இருந்து குக் கிராமங்கள் வரை அவர் மோட்டார் சைக்கிளிலும் வேறு வழிகளிலும் பயணம் செய்தார். மனிதகுலத்தின் மீது அன்பு என்பதே அவரின் மனதை ஆக்கிரமித்திருந்தது. மருத்துவ சேவையை வழங்கினார். ஆனால் அவரின் கண்கள் மகத்தான ஒன்றை இடையறாது தேடிக் கொண்டிருந்தன. அந்த ஓயாத தேடலில் அவர் மனித நேயமிக்க பல புரட்சியாளர்களை நண்பர்களை சம்பாதித்துக் கொண்டார். அவருடைய சந்திப்புக்களில் திருப்புமுனையாக அமைந்தது தோழர் பிடல் கஸ்ரோவுடனான சந்திப்புத்தான் கியூபாவின் புரட்சியில் தனக்கு பங்களிக்க கிடைத்தது மிகப் பெரும் வரப்பிரசாதமாகவே கருதியிருந்தார். கியூபா புரட்சி நிறைவுற்று அவர் கியூபாவின் தேசிய வங்கியின் தலைவரான போதும் அவரது தேடல் ஓய்ந்துவிடவில்லை. இயந்திரீகத்தனமா வாழ்க்கையை விட கட்டற்ற சுதந்திரந்திற்கான வாழ்வு அவருக்கு படித்திருந்தது. வியட்நாமுக்கு சென்றார். கொங்கோவிற்குச் சென்றார். அங்கெல்லாம் சமூக பொருளாதார மறுமலர்ச்சிக்கான போராட்டங்களில் தான் பங்களிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார்.

இறுதியாக பொலியாவில் புரட்சிகர எழுச்சிக்கு அங்குள்ள புரட்சியாளர்களுடன் இணைந்து தயாரான போது கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். இதில் அமெரிக்க உளவுத் துறையான சி.ஐ.ஏ யின் பங்களிப்பு பிரபலமானது.

சேகுவேரா ஒரு உலக மானிடனாகத் திகழ்ந்தார். இன்றும் இளம் உள்ளங்களில் வாழும் அவரது முகம் மானிடத்தின் சுதந்திரத்திற்கான ஆயிரம் கதைகளை சொல்லிக்கொண்டிருக்கிறது.

துளியளவும் தன்னலமில்லாத அந்த மனிதன் உலகளாவியளவில் சமூக மாற்றத்தை அவாவி நின்றான். வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் கோடானுகோடி மக்களின்பால் அவர் இடையறாது ஈடுபட்டு கொண்டிருந்தார்.



அவர் மரணப் படுக்கையில் பொலிவியாவில ஒரு பாடசாலையில் படுக்க வைக்கப்பட்டிருந்த போது அந்த வகுப்பறையின் போதாமை பற்றி சொல்லிக் கொண்டிருந்தாராம் குற்றுயிரான நிலையிலும் அந்த பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் நலன்கள் பற்றி அவர் சிந்தித்துக் கொண்டிருந்திருக்கிறார்.

1998 இல் அவரது புதைகுழி தோண்டப்பட்டு அவரது எலும்புக்கூடுகள் கியூபாவிற்கு எடுத்து வரப்பட்டன.

ஒரு மானிட நேயனாக, புரட்சியாளனாக, நண்பனாக, தந்தையாக, பிள்ளையாக, ஒரு சமூக மனிதனாக சேகுவேரா வாழ்ந்து மடிந்திருக்கிறார். அவர் தனது மனைவிக்கு, தனது தாய தந்தையருக்கு, தனது பிள்ளைகளுக்கு, தனது உற்றத்தோழர் பிடலுக்கு எழுதிய கடிதங்கள் அமரத்துவமானவை. காதலும், நட்பும் மானிட நேயமும் இயற்கையின்பால் ஈர்ப்பும், அஞ்சாமையும், கவித்துவமும் கொண்ட மனித்னாக சே வாழ்ந்து சென்றிருக்கிறார்.

உலகிலேயே மிகவும் வசீகரமான தோற்றம் கொண்ட சேகுவேரா நேர்த்தியாக உடையணிவதில்லையாம். ஆஸ்த்துமா வில்லையும் லத்தீன் அமெரிக்க சுருட்டும் என அவர் அலைந்தார். அவர் பிரத்தியேக வசதி வாய்ப்புக்கள் எதையும் தனக்கோ தன்து குடும்பத்திற்கோ ஏற்படுத்திக் கொள்ளவில்லை. கியூபாவின் சராசரி பிரஜைகளாகவே அவர்கள் வாழ்ந்தார்கள்.

ஆனால் வன்முறையும், குரூரமும், வீண் ஜம்பமும், பகட்டும், சுயநலமும், காட்டுமிராண்டித்தனமும் தனிநபர் வழிபாடும் நிறைந்த எமது சமூக சூழலில் உலகில் உன்னதமான புரட்சியாளனை மனித நேயமிக்க புரட்சியாளனை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கையின் இன்றைய தேவை சகிப்புத்தன்மை, விழிப்புணர்வு, ஒருங்கிணைந்த செயற்பாடு

ஹிந்துஸ்தான் டைம்ஸ் நிறுவனத்தினால் டெல்லியில் ஒழுங்கு செய்யபட்ட கருத்தரங்கில் பங்குபற்றிய ஜனாதிபதி பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டும் அதேவேளை இலங்கையில் அதிகாரப்பகிர்வினூடாக தீர்வு காண்பதற்கு தாம் தயாராக இருப்பதாக ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்திருந்தார்.

இந்தியா இலங்கையில் பிரச்சினைகள் தீர்வதற்கு தனது தார்மீக ஆதரவை தந்துதவினாலே போதுமென்றும் தெரிவித்திருந்தார்.

பேராசிரியர் திஸ்ஸ விதாரண அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழுவின் இறுதி அறிக்கை இவ்வருட கடைசியில் வெளிவருமென ஊர்ஜிதம் செய்துள்ளார்.

இலங்கையில் ஐ.நா வின் கண்காணிப்பகத்தை நிறுவ வேண்டுமென வலியுறுத்திய லூயிஸ் ஆர் அம்மையார் அவர்கள் தொடர்ந்தும் ஐ.நா சபையும் இலங்கையும் மனித உரிமை விடயத்தில் இணைந்து செயற்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தி இருந்தார்.

கிழக்கில் அபிவிருத்தி வேலைகளை துரிதப்படுத்தும் நோக்கில் நிலைமைகளை ஆராய்வதற்கு தேசிய புனர்நிர்மாண அமைச்சர் கருஜெயசூரிய அவர்களும், அரசியல் யாப்பு விவகார அமைச்சர் டியூ குணசேகர அவர்களும் கிழக்கிற்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரடியாக அவதானித்துள்ளனர்.

இச் செய்திகளெல்லாம் இலங்கையில் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கான இடைவெளி இன்னும் இருக்கிறதென்பதையே புலப்படுத்துகின்றன.

இலங்கையில் இன சமூகங்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கும் சமூக பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்குமான இடைவெளிகள் ஒரேயடியாக அற்றுப் போகவில்லை என்பதையே இச் செய்திகள் புலப்படுத்துகின்றன.

இன்று நாட்டில் நிலவும் அராஜக நிலைக்கும் குறிப்பாக தமிழ் மக்களினதும், முஸ்லீம், மலையக மக்களினதும் கோரிக்கைகள் பலவீனமடைந்து போவதற்கு புலிகளின் பாசிசம் வழங்கிய பங்களிப்பு நிராகரிக்க முடியாதது.

இலங்கையில் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கான சந்தர்ப்பங்களையெல்லாம் நழுவ விட்டு சமூகத்தை அதலபாதாளத்தில் தள்ளியதில் அவர்களின் பங்களிப்பு மறுக்க முடியாதது.

யுத்தம், சுனாமி, மீண்டும் யுத்தம் என்று இவையெல்லாவற்றிலும் மிகவும் பாதிக்கப்பட்டதும் மிககூடுதலான விலையை செலுத்தியதும் சாதாரண பொதுமக்களே. இந்த மக்கள் தொடர்பில் புலிகள் எக்காலத்திலும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ளவில்லை. ஆக்கபூர்வமான செயற்பாடுகளை அவர்கள் எப்போதும் நிராகரித்து வந்திருக்கிறார்கள்.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் பலாத்காரமாக யுத்தத்திற்கு ஆட்களை அணிதிரட்டுவது அவர்களின் அன்றாட உழைப்பை சுரண்டுவது உள்ளிட்ட பல காரியங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

தற்போது நிலவும் யுத்த சூழ்நிலை காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து கொண்டும் அமைதியின்றியும் வாழும் நிலை அதிகரித்துள்ளது. பொருட்களின விலையேற்றம் போக்குவரத்த நெருக்கடிகள் யாழில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் பல மடங்கு அதிகரிப்பதற்கான நிலைமைகளை தோற்றுவித்துள்ளன.

இந்த விலை உயர்வு யாழ் குடா நாட்டு மக்களை கணிசமான அளவு பாதித்திருக்கிறது. இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்து மீளக்குடியேறியுள்ள மட்டக்களப்பு, திருமலை மக்களையும், மன்னார் உட்பட இடம்பெயர்ந்து வாழும் மக்களையும் பாதித்துள்ளன.

பொதுவாக நாடளாவியளவில் தற்போதைய கெடுபிடியான சூழ்நிலைகளால் ஏற்பட்டுள்ள விலை உயர்வு மலையகத்தையும் தென்னிலங்கையின் கிராமப்புறங்களையும், நகரங்களில் தொழிற்சாலைகளில் தொழில் புரிவோரையும் கணிசமான அளவு பாதித்துள்ளது.

தொடர்ந்தும் இத்தகைய சூழ்நிலை நீடித்துச் சென்றால் மக்களின் அன்றாட வாழ்வு மிகவும் மோசமானதாக மாறும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

எனவே ஆக்கபூர்வமான சிந்தனை இந்த நாட்டில் முதன்மை பெறுகிறது. ஆக்கபூர்வமான சிந்தனைக்கு பிரதான எதிர்ப்பாளர்களாக இருப்பவர்கள் தமிழ பாசிசவாதிகளும், பௌத்த சிங்கள மேலாதிக்கவாதிகளும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இததகைய அடிப்படைவாத வகைபட்ட சிந்தனைகள் எப்போதும் எந்த நாட்டையும் எந்த சமூகத்தையும் உருபடவிட்டதாக சரித்திரம் இல்லை.

மக்களின் நலன்களை முன்னிறுத்தி சகிப்புத்தன்மையுடனேயே பிரச்சினைகள் அணுகப்பட வேண்டும்.

வெவ்வேறு குறுகிய நலன் சார்ந்து இந்த நாட்டு மக்களின் நீண்டகால நலன்களை உதாசீனம் செய்யும் விதமாக அரசியல் கட்சிகள், வேறு சமூக சக்திகள் செயறபடுவது இலங்கையின் இன்றைய போக்காக உள்ளது. தமது குறுகியகால நலன்களுக்காக நீண்டகால சமூக நலன்களை இவர்கள் அடகு வைக்க முயல்கிறார்கள் இதன பாரதூரமான விளைவு பிரச்சினைகள் பெரிதாகிக் கொண்டே போகின்றன. நாடு சகல சமூகங்களும் வாழ்வதற்கு தகவுடையதாக இருப்பதற்கான நிலைமைகள் மேலும் சிக்கலாகின்றன.

இலங்கையின் ஒவ்வொரு சமூகமும் சுயமரியாதை, கௌரவத்துடன் இணைந்து வாழ்வதற்கான நிலைமைகளை ஏற்படுத்துவதும் அதற்கான சாத்தியப்பாடுகளை உருவாக்குவதுமே இன்றைய அவசர அவசியத் தேவையாகும்.

இதற்கேற்புடையதாக இலங்கையின் சமூக சாதகமான அரசியல் சமூக சக்திகள் செயற்படுவதற்கு முன்வர வேண்டும்.

சர்வதேச சமூகமும் இந்தியாவும் தொடர்ந்து வலியுறுத்திவரும் சிறந்த விடயங்களை நாம் செவிமடுக்க வேணடும். அதனை பின்வருமாறு பட்டியலிடலாம்.

இலங்கையில் இனப்பிரச்சனைக்கு பாதிக்கப்பட்ட சமூகங்களின் அபிலாசைகளை கருத்திற்கெடுத்த தீர்வு ஜனநாயகம், மனித உரிமை ஆகியவற்றை உறுதிப்படுத்துதல் சமூக பொருளாதார அபவிருத்தி என்பனவே அவை பயங்கரவாதத்தையும், வன்முறையையும் சகித்துக் கொள்ளாமை சர்வதேச சமூகத்திடமிருந்து வெளிப்படும் இந்த சிறந்த அம்சங்களை நட்பு முறையில் கூறப்படும் இந்த விடயங்களை நாம் புறக்கணித்துவிட முடியாது.

ஆக்கபூர்வமானதும், நியாயபூர்வமானதுமான ஆலோசனைகளை நாம் கிரகிக்க உள்வாங்க சாதகமாக எடுத்துக்கொள்ள முன்வர வேண்டும்.

ஆனால் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கான உள்ளார்ந்த உணர்வு அவசியமானது.

வன்மும் குரோதமும் இலங்கையில சற்று தூக்கலாகவே காணப்படுகின்றன. "பகை கொண்ட உள்ள துயரத்தின் இல்லம் தீராத கோபம் யாருக்கு லாபம்" என்ற கண்ணதாசனின் பாடல் வரிகளையும் பட்டபின்னாலே வருகின்ற ஞானம யாருக்கும் உதவாது என்பதையும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக இந்த யுத்தம் ஆரம்பித்த 25 ஆண்டுகளுக்கு முன்னர் எமது தலைவர்களுக்கு இருந்த கம்பீரம் உரிமைகளை வலியுறுத்துவதற்கான இருந்த திராணி என்பவற்றை சிந்தித்து பாருங்கள்.

யுத்தம் ஆரம்பித்த பின்னர் 1990 களின் நடுப்பகுதிவரை அது காணப்பட்டது. இன்று தமிழ், முஸ்லீம், மலையக தலைவர்களின் தார்மீக துணிச்சல செயற்பாடு என்பன மிக மோசமாக நலிவுற்று இருக்கின்றன.

புலிகள் திட்டமிட்ட வகையில் தமிழ் மககளின் தலைமைகளை அழித்தது மாத்திரமல்லாமல், பேரினவாத சக்திகளையும் எழுச்சி கொள்ள செய்திருக்கிறார்கள். சிங்கள மக்கள் பிரச்சினைகளை புரிந்து கொள்வதற்கான இடைவெளிகளை தமது கொலை வெறி மூலம் பாசிச பயங்கரவாத நடவடிக்கைகள் மூலம் தகர்த்தெறிந்திருக்கிறார்கள்.

இன்று இரந்து நயம்பட பேசி கோரிக்கைகள் விடுமளவுக்கு சிறுபான்மை சமூகங்களின் குரலை பலயீனப்படுத்தியிருக்கிறார்கள்.

இந் நிலையில் தாம் சார்ந்த சமூகங்களின் நலன்களுக்காக செயற்படுவதில் சிறுபான்மை சமூகங்களின் தலைமைகள் பரஸ்பர துணிவுடனும் தேசிய சமூக சாதக அரசியல் சக்திகளுடன் இணைந்து செயற்படுவதும் அவசியமாகும்.

பொறுப்புணர்வுடன் ஆக்கபூர்வமான தீர்வை உருவாக்குவதற்கு இலங்கையின் சமூக வாழ்வை ஜனநாயகமயப்படுத்துவதற்கு சமூக பொருளாதார மேம்பாட்டை எய்துவதற்கு நாகரீகமாக மனித வாழவை கட்டியெழுப்புவதற்கு இத்தகைய புரிதல் இணைந்து செயற்படுதல் அவசியமானது.

ஏற்கனவே இனப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுவதற்கான அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழு அதற்கான வழியை திறந்துள்ளது. ●

# ஐ.நா மனித உரிமையாளர் ஆணையரின் வருகையும் இலங்கையில் மனித உரிமைகளும்

கடந்த ஆறு மாதங்களுக்குள் ஐ.நாவின் மனித உரிமை ஆணையத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்திருக்கிறார்கள். இலங்கையின் மனித உரிமை நிலவரங்கள் தொடர்பாகவும் இலங்கையில் மனித உரிமை நிலவரங்களை அவதானிப்பதற்கான நிலையமொன்றை நிறுவுவதற்குமான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

ஆட்கடத்தல்கள், காணமல் போதல் அநீதியான மரணங்கள், சிறுவர்களை யுத்தத்தில் ஈடுபடுத்துவது உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

அண்மைக் காலங்களில் இவை அதிகரித்திருப்பது வெளிப்படையாக உண்மை. மனித உரிமை நிலவரங்கள் கட்டப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டுமென்பதும் மிக மிக அவசியமானதாகும். மனித உரிமை மீறல்களை தனித்தனி சம்பவங்களாக கடந்த காலங்களிலிருந்து முற்றாக துண்டிக்கப்பட்டதாக நாம் கருதமுடியாது.

1979 இல் பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டதில் இருந்து அரச பயங்கரவாதம் என்றவொரு அம்சம் இலங்கையில் தொடர்ச்சியாக தலைகாட்டி வந்திருக்கிறது. இதற்கு அப்பாவிகள் பலரும் பலியாகி இருக்கிறார்கள் என்பதும் உண்மையாகும். இதேபோல் 1980 களின் நடுப்பகுதிலிருந்து புலிகளின் பாசிச பயங்கரவாதம் தீவிரமடைந்தது. மனித தார்மீக விழுமியங்கள் யாவும் தொடர்ச்சியாக சிதைக்கப்பட்டன.

இன்று இலங்கையில் நிகழும் பெருவாரியான மனித உரிமை மீறலகளுக்கு அத்திவாரமிட்டதும் ஆட்கடத்தல், சிறுவர்களை யுத்த தேவைகளுக்கு அணிதிரட்டுவது போன்ற மனித உரிமை மீறல்களில் குரூரமான கடைகெட்ட, கீழ்த்தரமான வழிமுறைகளை அறிமுகப்படுத்தியதும் புலிகள என்பது விளங்கிக்கொள்ளப்பட வேண்டும். அதே குணங்குறிகள் குரூரத்தனங்களுடன்தான் இன்றும புலிகள் இயக்கம் வாழ்கிறது என்பதும் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்ற பீற்றுதலின் பின்னால் இந்த ஈவிரக்கமற்ற இயல்புகளே மறைந்திருக்கின்றன என்பதும் புரிந்துகொள்ளப்படுவது மிக மிக அவசியம்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு என்பது இந்த பாசிச புலிகள் அமைப்பின் முகவர்கள் என்பதும் புலிகளின் அத்தனை கேடுகெட்ட நடவடிக்கைகளையும் ஈவிரக்கமற்ற செயல்பாடுகளையும் நியாயப்படுத்துவதற்கான அமைப்பு என்பதும் புரிந்துகொள்ளப்பட வேண்டும். மனித உரிமைகளை பற்றி பேசுவதற்கு இவர்களுக்கு எத்தகைய அருகதையும் கிடையாது.

இன்று இலங்கையில் புலிகள் தனி மனிதர்களுக்கு எதிரான சமூகத்துக்கெதிரான வன்முறைகளை கைவிட்டாலே அல்லது அதனை பகிரங்கமாக தெரியப்படுத்தினாலே மனித உரிமை மீறல்கள் இலங்கையில் கணிசமானளவு குறைந்துவிடும். ஆனால் புலிகள் அவ்வாறு செய்யப் போவதில்லை.

புலிகளின் வழித்தோன்றல்கள் அவர்களிடம் கற்று பிரதிவிம்பமாக செயற்பட விளையும் அதிகார அதிகார ஆசை படைத்தோர் என பலரும் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகிறார்கள். இந்த வகையில் மனித உரிமை மீறல் விதைகளை பெருமளவில் தூவிய விருட்சம் என நாம் புலிகளை குறிப்பிட முடியும். தமிழ் தேசிய கூட்டமைப்பினர் எனப்படுவோர் நச்சு விருட்சத்தை வழிபடுபவர்களும் அதன் விதைகாவிகளுமாவர்.

புலிகளின் பாசிச செயற்பாடுகள் இருக்கும் வரை இலங்கையில் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பது மனித உரிமை மீறல்களுக்கு முற்றுப் புள்ளியிடுவது என்பன மிகவும் கடினமான காரியம்

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசு தொடர்பாகவும், அரசல்லாத தம்மை அரசென்று அழைக்கும் பாசிச பயங்கரவாதக் குழுவின் செயற்பாடுகளையும் வேறுவேறு அளவு கோல்களால் அளக்கப்பட வேண்டும் எனக் கருதுவது அவ்வளவு சரியான நிலைப்பாடல்ல. அரசு கணக்குக் காட்ட வேண்டியது என்று அழுத்தியுரைப்பதன் மூலம் அரசல்லாத பாசிச பயங்கரவாதக் குழு வரம்பற்று



படுகொலைகளையும் அட்டூழியங்களையும் மேற்கொள்ளலாம் என்ற தொனியை ஏற்படுத்துகிறது.

மனித உரிமை தொடர்பில் இதுவொரு பாரதூரமான நிலைப்பாடாகும்.

2002ம் ஆண்டு பெபரவரியின் பின்னர் பேழையில் அடைக்கப்பட்டிருந்த நாகங்களை திறந்து விட்டதைப் போன்று வரம்பற்று அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் புலிகளை நுழைய விட்டதன மூலம் ஏற்பட்ட அனர்த்தங்கள் கொஞ்சநஞ்சமல்ல. அதன் விளைவுகளையே நாம் இன்று அறுவடை செய்து கொண்டிருக்கிறோம். நோர்வேயின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தம் 2002 பெப்ரவரிக்கு பின்னரான மனித உரிமை மீறல்களில கணிசமான பங்களிப்பை வழங்கியிருக்கிறது என்ற துரதிஷ்டமான உண்மையை நாம் உணர்ந்துகொள்ள தலைப்பட வேண்டும். வினை விதைத்து வினை அறுக்கிறோம் என்பதே உண்மையாகும்.

தற்போதைய சூழ்நிலையில் பலவீனமடைந்துவரும் பல்வேறு வழிகளில் நெருக்கடிகளைஎதிர்நோக்கும் தமிழ் பாசிசத்தை பற்றிய அவதானமான அணுகுமுறை தேவை அது பலமடைவதற்கான எந்த எத்தனமும் மனித உரிமைகளுக்கு விரோதமானதாகும்.

இலங்கையை பொறுத்தவரை மனித உரிமை மற்றும் ஜனநாயகவாதிகள் பிரதானமாக இரண்டு விடயங்களில் அக்கறை காண்பிக்க வேண்டும். ஒன்று இலங்கையில் இன சமூகங்களுக்கிடையே அதிகார பகிர்ந்தளிப்பு மற்றையது வெவ்வேறு கருத்து நிலைகளுடனான இருப்பிற்கான, வாழ்விற்கான உரிமை. இவை தொடர்பான அக்கறைகளில் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும வெளிப்படுத்த வேண்டும். என்பது எமது நியாயமான எதிர்பார்ப்பாகும்.

இலங்கையில் நாகரீகமான, கண்ணியமான பரஸ்பரம் மனிதர்களை மதித்து நடக்கும் ஜனநாயக உணர்வுமிக்க மனித உயிர்களின் பெறுமானத்தை உணர்ந்த உயர் கலாச்சார வாழ்வொன்று அனைத்து மட்டங்களிலும், அனைத்து அரங்கங்களிலும் கட்டியெழுப்புவதற்கு, இலங்கையில் இத்தகைய விடயங்களில் உணர்வுபூர்வமாக சமூக அக்கறைகளுடன் செயற்படுபவர்களை அடையாளம் கண்டு அவர்களுடன் இணைந்து செயற்பட முன்வர வேண்டும்.

இலங்கையில் மனித உரிமை, சமாதானம் வியாபாரமயப்பட்டிருககின்றன என்பது உணரப்பட வேண்டும். சரியான விடயங்களை பிழையான தரப்பினரிடம் கேட்டு அறிந்து கொள்ள முடியாதென்பதும் அவ்வாறான முறைகள் ஊடகங்களினூடாக வெளிவருவது போலியானதும் உண்மைக்கு நெருக்கம் குறைவானதுமான தகவல்கள மக்களை சென்றடைவதற்கு வழி வகுக்கும்.

அதுமாத்திரமல்லாமல் மனித உரிமை மீறல்களை இழைத்துவிட்டு ஏப்பம் விட்டுக்கொண்டிருக்கும் சக்திகளுக்கு உற்சாகமளிப்பதாக அமையும்

இலங்கையில் மனித உரிமை மீறல்களை கருத்திற்கெடுக்கும் போது இலங்கையின் வரலாறு அரசியல், சமூக முரண்பாடுகள் ஆயுதம் தாங்கிய இயக்கங்களின் உருவாக்கம், அங்கு உருவாகிய ஜனநாயக விரோத போக்கு, அரச பயங்கரவாதம் உள்ளிட்ட பல விடயங்கள் கருத்திற்கெடுக்கப்பட வேண்டும். வரலாற்றில் நிகழ்ந்த பல்வேறு சம்பவங்களுக்கிடையே உள்ள தொடர்புகள் விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். அவ்வப்போது நடக்கும் தனித்தனி சம்பவங்களை மாத்திரம் பேசுவதால் இலங்கையில் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காண முடியாது. இறுதி விளைவு நன்றாக இருக்க வேண்டும். அது நீடிக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்